மே 2011 May | இதழ் 244 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION

இறந்த உடல்களில் அசைகிறது உயிர்

## 'போர்க்குற்ற நாள்'

MAY மே 18 2011 WAR CRIMES DAY




21 வது ஆண்டு th Year

a monthly information digest
இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம், ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

## மே 18 - போர்க்குற்ற நாள்

போர்க் குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றித் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியுமென்ற நம்பிக்கையோடு இந்த வருட மே மாதம் பிறந்திருக்கின்றது.

மனித வாழ்வு என்பதே நம்பிக்கைதான். அந்த நம்பிக்கையோடு முப்பதாண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் முன்னெடுத்த விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் பின்னடைவைக் கண்ட மே 18, தமிழர் வாழ்வில் புதிய ஓர்மத்தை உருவாக்கியது.

2009 மே 18க்குப் பிறகு, 'இனி நாம் என்ன செய்யப் போகிறோம்' என்ற கேள்வி முன்னெழுந்தபோது, எங்கள் வீரர்களையும் அப்பாவி மக்களையும் கொன்றொழித்து, பல லட்சம் உறவுகளை ஏதிலிகளாக்கி முட்கம்பிகளுக்குள் அடைத்து வைத்து, எங்கள் மண்ணைச் சூறையாடிக் கொண்டிருக்கும் சிங்களக் கொலைஞர்களை குற்றக்கூண்டில் ஏற்ற வேண்டுமென்ற சபதம் எங்களுக்குள் எழுந்தது.

கொலைஞர்களுக்கு உடந்தையாக அன்றிருந்தவர்களில் ஒரு பகுதியினர், மனிதாபிமானம், மனித உரிமை மீறல், இனப்படுகொலை, போர்க்குற்றம் என்பவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக உச்சரிக்க ஆரம்பித்தனர்.

ஆதார ஒளிப்படங்களும், அராஜகத்தை நிரூபிக்கும் காணொளிகளும், அப்பட்டமான ஆவணங்களும் உலகை நோக்கி வலம்வர ஆரம்பித்தன. கொலைஞர் கூட்டத்துள் கூடவிருந்து செய்தவர்களே பணத்துக்காக இவைகளை விற்க ஆரம்பித்தனர். வளர்ந்துவிட்ட நவீன தொழில்நுட்பம் விண்ணிலிருந்து மண்ணில் நடந்தவைகளைப் பதிவு செய்து தந்தது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் புலம்பெயர்ந்த தமிழர்களும் தொடர்ந்து எழுப்பி வந்த குரல், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் மனச்சாட்சியை உலுக்கியதால் மூவர் கொண்ட நிபுணர் குழுவை நியமிக்க வைத்தது.

ஆலோசனை-விசாரணை-சுற்றுப் பயணங்கள்-அமர்வுகள்-அறிக்கைகள் என்று சிறிது காலத்தை இழுத்தடித்தால், உலகம் எல்லாவற்றையும் மறந்துவிடும்; அத்துடன் இலங்கையையும் காப்பாற்றி விடலாம் என்று பான் கி மூன் நினைத்திருக்கலாம்! ஆனால் நடந்தது வேறு!

குற்றவாளிக் கூண்டில் இலங்கை அரசு; அதற்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டிய வழக்காளியாக பான் கி மூன்.

'குற்றவிசாரணைக்கு உத்தரவிட எனக்கு அதிகாரமில்லை' என்று சாட்டுச் சொல்லி பான் கி மூன் தப்பிச் செல்ல அனுமதிக்க முடியாது. அதுதான் அவரது விருப்பமென்றால், அவரும் போர்க்குற்றவாளியாகவே கருதப்பட வேண்டியவர். அதற்கும் தமிழரிடம் ஆதாரங்களுண்டு.

இதனால், இவ்வருட 'மே 18 போர்க்குற்ற நாள்' முன்னைய ஆண்டுகளைவிட மேலும் வலுப்பெற்று நிற்கின்றது. ஆனால் எமக்குள்ளிருக்கும் சிலர், போர்க்குற்றப் பெயரை அகற்ற விரும்புகின்றனர். மகிந்த அரசைக் காப்பாற்றும் நோக்கமாகவும் இது இருக்கலாம்.

மகிந்த அரசை போர்க்குற்றத்திலிருந்து மீட்க முனைபவர்கள் யாராக இருந்தாலும், என்ன வடிவில் வந்தாலும் அவர்கள் அடையாளம் காணப்படுவர்! இது சத்தியமென உறுதி எடுப்போம்!

போர்க்குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கும் வரை, மே 18 என்பது போர்க்குற்ற நாளே. இதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph


**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் சத்ய சாயி பாபா மகாசமாதி அடைந்தார்



மதங்களைக் கடந்து மனிநேயத்துடன் மக்கள் சேவகராக வாழ்ந்து காட்டிய பகவான் சத்ய சாயி பாபா கடந்த மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணியளவில் மகாசமாதியடைந்தார் என்ற செய்தி உலகம் முழுவதுமுள்ள பல கோடி மக்களை மாறாத சோகத்துக்குள்ளாக்கியுள்ளது. மார்ச் மாதம் 28ஆம் திகதி மூச்சுத் திணறல் காரணமாக சத்ய சாயி அறிவியல் மற்றும் உயர் மருத்துவக்கழக வைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு ஏறத்தாழ நான்கு வாரமாக துரித சிகிச்சையளிக்கப்பட்டது.

ஏப்ரல் 24 முதல் 27ஆம் திகதி வரை புட்டபர்த்தியிலுள்ள குல்வந்த் மண்டபத்தில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் இறுதி மரியாதைக்கு பகவானின் புனித உடல் வைக்கப்பட்டது. அரசியல்வாதிகள், உயரதிகாரிகள், தொழிற்றுறையாளர்கள். கலைஞர்கள் உட்படப் பல்லாயிரம் மக்கள் தங்கள் அஞ்சலியை இங்கு செலுத்தினர்.

பகவானின் திருவுடல் பிரசாந்தி நிலையத்தில் புனித அடக்கம் செய்யப்பட்ட பின்னரும் பெருந்தொகை மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மலர் வணக்கம் செலுத்தினர். 114 நாடுகளில் 1200க்கும் அதிகமான சாயி சமித்திகள் சமூகப் பணியாற்றி வருவதுடன், ஒழுக்கம் நிறைந்த சாயி பாடசாலைகளையும் நடத்தி வருகின்றன. ●

# கன்சர்வேடிவ் பெரும்பான்மை ஆட்சி
# ஜாக் லேட்டன் எதிர்க்கட்சித் தலைவர்
# ராதிகா முதலாவது கனடிய தமிழ் எம்.பி.

## லிபரல், புளொக் தலைவர்களுடன் அவர்கள் கட்சிகளும் படுதோல்வி
## பசுமைக் கட்சித் தலைவி எலிசபெத் மே சாதனை வெற்றி!






ஸ்டீபன் ஹாப்பர் தமது தேர்தல் பிரசாரங்களில் கேட்டவாறு அவரது கன்சர்வேடிவ் கட்சிக்கு 167 ஆசனங்களில் வெற்றியை வழங்கிய மக்கள், முதற்தடவையாக அவருக்குப் பெரும்பான்மை ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர். முன்னைய நாடாளுமன்றத்தில் 143 இடங்களிலிருந்த கன்சர்வேடிவ் இப்போது 167 இடங்களைப் பிடித்துள்ளது.

என். டி. பி 102 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ளது. கியுபெக் மாகாணமே இதற்கான வாய்ப்பை அவருக்கு வழங்கி, அதிகாரபூர்வ எதிர்க்கட்சித் தலைவராக்கியுள்ளது. முன்னர் 36 இடங்களிலிருந்த என். டி. பி இப்போது 66 இடங்களைக் கூடுதலாகப் பெற்றதும் ஒரு சாதனையே.

என். டி. பி சார்பில் ஸ்காபரோ றூஜ்-றிவர் தொகுதியில் போட்டியிட்ட ராதிகா சிற்சபைஈசன் சுமார் பதினேழாயிரம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். கனடிய நாடாளுமன்றின் முதலாவது தமிழ் எம். பி என்ற பெருமையைப் பெற்ற ஈழத்தமிழர் இவராவர். ரொறன்ரோவில் என்.டி.பி. மேலதிகமாக ஐந்து ஆசனங்களைப் பெற்றுள்ளது.

பசுமைக் கட்சித் தலைவி எலிசபெத் மே பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஹாப்பரின் முன்னாள் அமைச்சர் ஒருவரை வீழ்த்தி தமது கட்சிக்கு ஓரிடத்தைப் பெற்றுள்ளார்.

லிபரல் கட்சித் தலைவர் இக்னேடியவ் ரொறன்ரோவில் தமது தொகுதியில் தோல்வியடைந்ததுடன், அவரது கட்சி மொத்தம் 34 ஆசனங்களில் மட்டுமே வென்று மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கியுபெக் மாகாண தனித்துவக் கட்சியாக விளங்கிய புளொக் கியுபெக்கா 47 இடங்களிலிருந்து நான்குக்கு இறக்கப்பட்டுள்ளது. தமது தொகுதியில் தோல்வியடைந்த இதன் தலைவர் டுசேப் பதவியைத் துறப்பதாக அறிவித்துள்ளார்.

ரொறன்ரோவில் லிபரல் பிரபலங்களான மரியா மினா, ஜெராட் கென்னடி, ஜோ வொல்ப் உட்படப் பலர் மண்கவ்வியுள்ளனர். ஸ்காபரோ தென்மேற்கில் என். டி. பி. லிபரலை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது. இங்கு கன்சர்வேடிவ் அபேட்சகராகப் போட்டியிட்ட ராகவன் பரஞ்சோதி சுமார் 11,000 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்துக்கு வந்துள்ளார். மிசிசாகா-பிராம்டனின் 9 தொகுதிகளில் எட்டினை கன்சர்வேடிவ் எடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ●



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

உலகின் நட்பு நாடுகளாகத் தெரிவான இருபத்தியைந்தினுள், கனடா முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. எச். எஸ். பி. சி நிறுவனம் இரண்டாண்டுக்கு ஒரு தடவை இந்தத் தெரிவை நடத்தி முடிவை அறிவித்து வருகின்றது. குடிவரவாளர்களை மையப்படுத்தி புள்ளிகள் வழங்கப்படுகின்றது. மக்களுடனான நல்லுறவு, உள்நாட்டு மொழிகளைப் பயிலுவதிலுள்ள ஆற்றல், நாட்டுடன் இணைந்து வாழ்வதில் ஏற்படுத்தப்படும் வாய்ப்புகள், புதிய பண்பாடுகளை ஏற்றுக்கொள்ள வழங்கப்படும் வாய்ப்பு ஆகிய நான்கு அம்சங்களின் அடிப்படையில் நட்பு நாடு தெரிவாகின்றது. இவ்வருடம் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா நாடுகள் முறையே 4ம் 9ம் இடங்களைப் பெற்றுள்ளன.

கடந்த மாதம் 13ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான நாட்களில் ஒன்ராறியோ மாகாணப் பொலிசார் ஆசனப்பட்டி அணியாத வாகனங்களைச் சோதனையிடும் நடவடிக்கையில் கூட்டாக ஈடுபட்டனர். குறிப்பிட்ட பத்து நாட்களிலும் 1,050,329 வாகனங்கள் சோதனையிடப்பட்டன. அகப்பட்டவர்கள் மீது மொத்தம் 5,622 குற்றப்பத்திரிகைகள் பதிவு செய்யப்பட்டன. இவர்களில் 1791 பேர் ஆசனப் பட்டிகள் அணியாது வாகனம் ஓட்டிய சாரதிகள். பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக ஆசனப்பட்டி அணியத் தவறியமைக்காக 140 பேர் மீது குற்றம் விதிக்கப்பட்டது. இந்தாண்டின் மார்ச் மாதத்தில் 900 வாகன விபத்துகள் ஒன்ராறியோவில் இடம்பெற்றதாக பொலிசாரின் அறிக்கையொன்று சுட்டிக்காட்டுகின்றது.

இந்த மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற கனடிய பொதுத் தேர்தலுக்கான முற்கூட்டிய வாக்களிப்பு கடந்த மாதம் 22, 23, 25ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் நடைபெற்றது. இந்த மூன்று நாட்களிலும் சுமார் இருபது லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்துள்ளனர். கடைசியாக நடைபெற்ற 2008ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பதினைந்து லட்சம் வரையானவர்களே முற்கூட்டிய வாக்களிப்பில் பங்குபற்றியிருந்தனர். 2008ஆம் ஆண்டுத் தேர்தலைவிட இம்முறை முற்கூட்டிய வாக்களிப்பு 34.5 வீதம் அதிகமாகும். கடந்த மாதம் மூன்று நாட்கள் இடம்பெற்ற முற்கூட்டிய வாக்களிப்பின் இறுதி நாளான 25ஆம் திகதி 82 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்து ஒரு சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

வாகனத் தரிப்பு குற்றப் பத்திரம் (டிக்கட்) பெறுபவர்களின் முறைப்பாடுகள், எதிர்ப்புகளைக் கவனிக்கவென ரொறன்ரோவில் புதிய நடைமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வீதிகளிலுள்ள மீட்டர்களில் பணம் செலுத்தி டிக்கட் பெற்றவர்கள் அல்லது மீட்டர் இயந்திரத்தில் பணம் செலுத்தியவர்கள் தங்கள் ஆட்சேபனையை தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் இனிமேல் தெரிவிக்க முடியும். தங்கள் பக்க நியாயத்துடன் தங்களுக்கு வழங்கப்பட்ட தண்ட டிக்கட்டையும் சேர்த்து மேற்கண்டவாறு அனுப்ப வேண்டும். இது பற்றிய பூரண விபரங்களை http://www.toronto.ca/pay-toronto-tickets/disputes.htm என்ற இணையத் தளத்தில் அல்லது 311 தொலைபேசித் இலக்கத்தில் பெறமுடியும்.

மனித உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் முன்னணி நாடுகளில் கனடா இல்லையென்று அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் கைதிகளை நடத்தும் முறை, வெளிநாடுகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கனடியர்களின் உரிமைகளை உதாசீனம் செய்தமை, ஐ. நாவின் மனித உரிமைப் பிரகடனங்களில் கையொப்பமிட மறுத்தமை போன்ற காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தொடர்பான கனடாவின் நிலைப்பாட்டையும், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளுக்கு வழங்கி வந்த நிதியுதவியை நிறுத்தியமை போன்றவைகளையும் சபை குறை கூறியுள்ளது.

ஒன்ராறியோவில் வாகன எரிபொருளுக்கான வரி குறைக்கப்பட மாட்டாதென மாகாண நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். லீட்டருக்கு 14.7 சதம் ஒன்ராறியோ அரசு வரியாக அறவிடுகின்றது. ஏப்ரல் 28ஆம் திகதி ரொறன்ரோவில் எரிபொருள் லீட்டருக்கு 138.5 சதமாக அதிகரித்திருந்தது. 29ஆம் திகதி மேலும் ஒரு சதத்தால் அதிகரித்தது. இந்த வருட கோடை விடுமுறையின்போது லீட்டரின் விலை 150.0 தாண்டலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. மசகு எண்ணெயின் விலையில் பெரும் அதிகரிப்பு ஏற்படாத போதிலும், எரிபொருளின் விலை விஷவாயு போல அதிகரித்து வருவதையிட்டுக் கனடிய அரசாங்கங்கள் எந்தக் கரிசனையும் காட்டவில்லையென மைய ஊடகங்கள் பலவும் குற்றம் சாட்டியுள்ளன.

# மகாராணி குடும்ப திருமண வைபவம்



எலிசபெத் மகாராணியின் பேரனும், சார்ள்ஸ்-டயானா தம்பதிகளின் மூத்த புதல்வருமான வில்லியமுக்கும் கேற் மிடில்ரனுக்குமான திருமணம் வழக்கமான அரண்மனை நியமங்களின்படி கோலாகலமாகக் கடந்த மாத இறுதி வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 29) நடைபெற்றது. பல லட்சம் மக்கள் காணொளி வாயிலாகவும், நேரடியாக இணையத் தளங்கள் வழியாகவும் இதனைப் பார்த்தனர்.

வில்லியம்-கேற் திருமணம் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னரே இவர்களுக்குப் பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்றும், பெண்ணாகப் பிறந்தால் முடிக்குரிய அந்தஸ்துக் கிடைக்குமா என்றும் பல ஊடகங்கள் சர்ச்சையைக் கிளப்பி விட்டன.

கனடாவில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி மே 2ஆம் திகதி இங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காட்டிய ஆர்வத்திலும் கூடிய ஆர்வத்தை வில்லியம்-கேற் திருமணத்தில் கனடிய மக்கள் காட்டியது தெரியவந்தது.

கேற் அணிந்த திருமண உடை பற்றியே பல ஊடகங்களிலும் செய்திகள் வந்தன. பாவம் வில்லியம்! இவரது திருமண உடை பற்றி எவரும் கவனம் செலுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Panel of experts finds credible reports of war crimes during Sri Lanka conflict – UN

The panel of experts set up to advise Secretary-General Ban Ki-moon on accountability issues with respect to the final stages of the conflict in Sri Lanka has found credible reports of war crimes committed by both the Government and Tamil rebels and calls for genuine investigations into the allegations, according to a report made public today by the United Nations.

The decision to release the report, which was submitted to the Secretary-General on 12 April and shared with the Sri Lankan Government, was made as a "matter of transparency and in the broader public interest," Mr. Ban's spokesperson said in a statement.

"The Secretary-General sincerely hopes that this advisory report will make a contribution to full accountability and justice so that the Sri Lankan Government and people will be able to proceed towards national reconciliation and peace," the statement added.

Mr. Ban is carefully reviewing the report's conclusions and recommendations, "including its disturbing assessment that a number of allegations of serious violations of international humanitarian and human rights law committed by both the Liberation Tigers of Tamil Eelam (LTTE) and the Government of Sri Lanka are credible, some of which would amount to war crimes and crimes against humanity."

Government forces declared victory over the rebel LTTE in May 2009 after a conflict that had raged on and off for nearly three decades and killed thousands of people. The conflict ended with large numbers of Sri Lankans living as internally displaced persons (IDPs), especially in the north of the island country.

The panel found credible allegations that comprise five core categories of potential serious violations committed by the Government in the final stages of the conflict, including killing of civilians through widespread shelling and the denial of humanitarian assistance.

The credible allegations concerning the LTTE comprise six core categories of potential serious violations, including using civilians as a human buffer and killing civilians attempting to flee LTTE control.

The panel's first recommendation is that the Government of Sri Lanka should respond to the serious allegations by initiating an effective accountability process beginning with genuine investigations.

"The Secretary-General has consistently held the view that Sri Lanka should, first and foremost, assume responsibility for ensuring accountability for the alleged violations," said the statement, adding that he encourages the Government to respond constructively to the recommendations made by the panel. (Contd. on page 25)

# Ban Ki Moon Powerless to Pursue War Crimes in Sri Lanka

U.N. Secretary-General Ban Ki-moon admitted that he is not empowered to establish an international war crimes tribunal to probe the "serious violations" of international humanitarian and human rights law committed during the concluding stages of the decades-long conflict in Sri Lanka in May 2009.

Ban has been advised this will require host country consent - in this case the consent of the Sri Lankan government - or a decision by member states through an appropriate intergovernmental forum such as the General Assembly, the Security Council or the Human Rights Council.

Still, the secretary-general says he has "consistently held the view that Sri Lanka should, first and foremost, assume responsibility for ensuring accountability for the alleged violations."

The Sri Lanka government is not likely to give its consent to any investigations of war crimes charges.

As a result, it will be left to one of the three intergovernmental bodies to decide on any course of action or act on the recommendations of the panel.

The three-member panel, which submitted its 196-page report to Ban last week, recommended he "should immediately proceed to establish an independent international mechanism" to investigate allegations of violations both by the government of Sri Lanka and the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

The panel declared that some of allegations "amount to war crimes and crimes against humanity."

The report provides details of these allegations - including photographs and satellite imagery of civilian targets bombed during the conflict - which have been vehemently denied by the Sri Lankan government.

The LTTE, which has also been subject to severe criticism by the panel, is accused of executing civilians tantamount to war crimes. "The conduct of war represented a grave assault on the entire regime of international law designed to protect individual dignity during both war and peace," the report said.

The government made an unsuccessful attempt last week to convince the secretary-general not to release the report, even though large portions of it were leaked to the Sri Lankan media. (Contd. on page 25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# பெண்கள் விரைவில் பருவமடைதல்

பெண்கள் பருவமடையும் வயது குறைந்து வருவதை பெற்றோர்கள் அவதானித்து இருக்கக் கூடும். உதாரணத்திற்கு தாய் 14 வயதில் முதல் மாதவிடாயை (Menarche) அடைந்தால் மகள் இப்பொழுது 10-12 வயதிலேயே அடைந்து விடுகிறாள்.

கடந்த சில தசாப்தங்களாகவே இம் மாற்றம் படிப்படியாக ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. 1800ன் நடுப் பகுதிகளில் அமெரிக்கப் பெண் குழந்தைகளில் முதல் மாதவிடாய் 17 வயதளவில் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் 1960 களில் 12 வயதாகக் குறைந்துவிட்டது.

இதற்குக் காரணம் என்ன? பலரும் பலவாறு ஊகிக்கிறார்கள். அடிப்படைக் காரணம் முற்றும் புதியதான வாழ்க்கை முறைதான் என நம்பப்படுகிறது. போஷாக்கான உணவு தாராளமாகக் அளவு கிடைக்கிறது. இதனால் அவர்களது உடல் வேகமாகவும் அதிகமாகவும் வளர்ச்சியுறுகிறது. எடை அதிகரிக்கிறது. அதீத எடை ஹோர்மோன்களின் அளவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. பருவமடையும் வயது முன் நகர்வதற்கு இது காரணம் எனலாம்.

இன்றைய வாழ்க்கை முறைகள் காரணமாக முன்னைய சமூகத்தினரை விட இன்றைய பிள்ளைகள் சிறு வயதிலேயே புதியவை பலவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். அனுபவிக்கவும் செய்கிறார்கள். தொலைக்காட்சி மற்றும் கணினி காரணமாக இன்றைய பிள்ளைகளில் அறிவு விருத்தி வேகமாக கிடைக்கிறது.

அதேபோல பாலியல் சம்பந்தமான அறிவும் விரைவில் கிட்டுகிறது. தொலைக்காட்சி, சினிமா ஊடாக இவை பற்றிய உணர்வுகளையும் பெறுகிறார்கள். இவையே பாலியல் ஹோர்மோன்கள் விரைவில் தூண்டப்படுவதற்கு மற்றொரு காரணம் என நம்பப்பட்டது. இதைத் தவிர குழந்தைகள் பாலகர்களாயிருக்கும் காலத்தில் சோயா சார்ந்த பால் மாக்களையும் போசாக்கு மாக்களையும் பிரதான உணவாக உட்கொள்வதும் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. சோயாவில் உள்ள பைற்ரஈஸ்ரஜின் (Phytoestrogen) பெண்களின் ஹோர்மோனான ஈஸ்ரஜின்னை ஒத்தது. இது பொதுவாக உடலுக்கு நல்லது என்றே கருதப்படுகிறது. ஆயினும் குழந்தைகளில் சோயா சார்ந்தவை பிரதான உணவாக அமைந்தால் பாதகமாக அமையலாம் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். பரம்பரைக் காரணிகளும் அடங்கும். தாய் குறைந்த வயதில் பருவமடைந்தால் குழந்தைக்கும் அவ்வாறு நேர்வதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

ஆனால் கலிபோனியாவில் அண்மைய ஆய்வு (Young Girls' Nutrition> Environment and Transitions -CYGNET) ஒன்றானது இதற்குப் புதிய ஒரு காரணமும் இருக்கலாம் எனச் சொல்கிறது. பெற்ற தகப்பன் வீட்டில் இல்லாத பெண் குழந்தைகள் இளவயதிலேயே பருவமடைவதாக அது கூறுகிறது. ஆனால் இது எல்லோருக்கும் பொதுவானது அல்ல. அதிக வருமானங்கள் உள்ள குடும்பங்களில் மட்டும்தான் இது அவதானிக்கப்பட்டது. 6 வயது முதல் 8 வயது வரையான 444 பெண் குழந்தைகளில் 2 வருடங்களாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வானது பருவமடைதல் (Puberty) பற்றியதே அன்றி பூப்படைதல் (Menarche) பற்றியது அல்ல. மார்பகங்கள் பெருப்பதையும், பாலுறுப்புகளை அண்டிய பகுதிகளில் முடி வளர்வதையுமே இந்த ஆய்வில் பருவமடைவதாகக் கொண்டார்கள்.

பூப்படைதல் என்பது முதல் முதலாக பெண்ணுறுப்பிலிருந்து குருதிக் கசிவு ஏற்படுவதாகும். அதாவது முதல் முதலாக மாதவிடாய் ஏற்படும் நிகழ்வாகும். ஆனால் பருவமடைதல் என்பது பூப்படைதலுக்கு முன்னோடியான நிகழ்வு என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

Puberty, Menarche ஆகிய சொற்களுக்கு இடையேயான பொருட்களைத் தெளிவுபடுத்தக் கூடிய சரியான தமிழ்ப் பதங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. எனவேதான் முறையே பருவமடைதல், பூப்படைதல் ஆகிய பதங்களை உபயோகப்படுத்தியுள்ளேன்.

தகப்பன் வீட்டில் இல்லாது இருப்பதற்கும் மகள் விரைவில் பருவமடைவதற்கும் இடையே என்ன தொடர்பு இருக்க முடியும்? தகப்பன் வீட்டில் இல்லாததால் உண்டாகக் கூடிய சமச்சீர் அற்ற குடும்பச் சூழல் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அப்படியானால் அது ஏன் அதிக வருமானம் உள்ள குடும்பங்களில் மட்டும் நடக்கிறது? குறைந்த வருமானங்களில் பொதுவாக குழந்தைகளைக் கவனிப்பதற்கான ஆதரவு சமூகத்திலிருந்து கிடைக்கிறது. பெற்றோர்களின் தாய் தகப்பன்மார் வீட்டில் இருந்து கவனிப்பர். அல்லது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் கை கொடுப்பர்.

மற்றொரு காரணமும் கருத்தில் கொள்ளப்படுகிறது. மேலை நாடுகளில் வசதியான குடும்பங்கள் பலவற்றில் தாய் தனியாகவே வாழ்பவளாக இருப்பாள். குழந்தைகள் ஒற்றைப் பெற்றோர் குழந்தைகளாக இருப்பர். இதனால் தாய் நீண்ட நேரம் தொழில் செய்பவராக இருக்கக் கூடும் என்பதால் தாயின் ஆதரவு குழந்தைக்குக் கிடைப்பது குறைவாக இருக்கும். தாயுடனான நெருக்கமான உறவு குறைந்த பெண் பிள்ளைகள் விரைவாக பருவடைகிறார்கள் என வேறு ஆய்வுகள் கூறுகின்றன.

இரு ஆய்வுகளையும் ஒன்றாகக் கருத்தில் கொண்டால் தாயோ, தந்தையோ எவராக இருந்தாலும் பெற்றோருடனான ஆதரவு குறைந்த பிள்ளைகள் விரைவில் பருவமடைகிறார்கள் என்பது புரிகிறது. இது எமது சூழலுக்கான ஆய்வு அல்ல என உதறித் தள்ளுவது புத்திசாலித்தனம் அல்ல.

எமது சூழலிலும் குழந்தைகளுக்கு தாய் தகப்பனுக்கு அப்பால் பேரன் பேத்தி உறவினர்களின் ஆதரவும் அரவணைப்பும் குறைந்து வருகிறது. அதற்கு மேலாக இங்கும் எமது பெண் குழந்தைகள் முன்னைய விட விரைவிலேயே பருவமடைவது அதிகமாகி வருகிறது. எனவே இவ்விடயங்கள் பற்றிய அறிவு அவசியம்.

காலத்திற்கு முந்தி பெண்கள் பருவமடைவது பற்றி ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும். காரணங்கள் இருக்கின்றன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனுவல் ஜேசுதாசன் சட்டத்தரணி

# முதியோரைத் துன்புறுத்தல்

***'உலக முதியோர் துன்புறுத்தல் விழிப்பு நாள்' ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 15ஆம் திகதி சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது. அடுத்த மாதம் 5ஆம் திகதி வரவுள்ள ஐந்தாவது ஆண்டு விழிப்பு நாளை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.***

முதியோர் பெரும்பாலும் தம் சொந்த வீட்டிலோ அல்லது உறவினர் வீட்டிலோ அல்லது முதியோர் பராமரிப்பு நிலையங்களிலோ தம் கணவன் அல்லது மனைவியினால், சொந்த பிள்ளைகளால், நெருங்கிய உறவினர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள். அமெரிக்காவில் ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 500,000 – 1,000,000 முதியோர் துன்புறுத்தப்பட்ட முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன.

முதியோர் துன்புறுத்தல் இன, மத, மொழி வேறுபாடின்றி இடம்பெறுகிறது. இருப்பினும் சிறுபான்மை இன முதியோர்கள் மொழிச்சிக்கல், சமுக அன்னியப்படுத்தப்படல், பொருளாதார ரீதியாக பிறரில் தங்கியிருத்தல், உளரீதியாக உறவினர்களின் தயவில் தங்கிவாழுதல், கலாசார கட்டுப்பாடு போன்ற காரணங்களுக்காக தமக்கு விளைவிக்கப்படுகின்ற துன்புறுத்தல்களை முறையிடுவதற்கு முடியாமல் இருக்கிறது.

முதியோர் துன்புறுத்தல் பல வழிகளில் இடம்பெறுகிறது. கனடாவில் தேசிய அளவிலும் மாகாண மட்டத்திலும் எடுக்கப்பட்ட கணிப்பின்படி முறையீடு செய்யப்பட்ட முதியோர் துன்புறுத்தல்களில் அடையாளம் காணப்பட்ட இரு வகையானவை பொருளாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் செய்யப்படுபவை. இவற்றுடன் உடலில் தாக்குதல், பாலியல் தாக்குதல், தகுந்த பராமரிப்பு அளிக்கத் தவறுதல், மருத்துவ கவனிப்பின்மை, மனித உரிமைகளை மீறுதல் போன்ற வகைகளிலும் முதியோர் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

பொருளாதார ரீதியாக:
முதியோரின் பணத்தை அல்லது அவர்களின் சொத்தை தவறான வகையில் பாவித்தல். இது மோசடியாகவோ, திருட்டாகவோ அமையும். முதியோர் ஒருவருக்கு சேரவேண்டிய பணத்தை அவரிடம் கொடுக்காமல் தமதாக்கிக் கொள்வதும் அதற்காக திருட்டுக் கையொப்பமிட்டு பத்திரங்கள் தயாரிப்பது, முதியவரின் காசோலைகளில் திருட்டுக் கையொப்பமிட்டுப் பணத்தை திருடுவது போன்றவை பொருளாதார ரீதியாகப் புரியப்படும் துன்புறுத்தல்களில் சில.

உளவியல் ரீதியாக:
வார்த்தைகளால் தாக்குதல், அவமானப்படுத்துவது, தனிமைப்படுத்துவது, பயமுறுத்துவது, அச்சுறுத்துவது, அவர்களின் செயற்பாடுகளை நியாயமின்றி தடை செய்வது, இத்தகைய செயல்கள் முதியவர்களின் அடையாளத்தை நிர்மூலமாக்குவதுடன் அவர்களின் சுயமரியாதையையும் தகர்க்கிறது. இது முதியவர்களுக்கு பய அச்சத்தையும், அதிக மன உளைச்சலையும் ஏற்படுத்துகிறது. பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்கும் அவர்களுடன் உறவாடுவதற்கும் தடைவிதித்தல், அவர்களைத் தரக்குறைவான வேலைகளைச் செய்ய நிர்ப்பந்தித்தல், அவர்களை சிறு குழந்தைகள் போல் நடத்துதல் போன்றவையும் உள ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளடங்கும்.

உடல் ரீதியாக:
கன்னத்தில் அடித்தல், உலுப்புதல், தள்ளுதல், உதைத்தல், பொத்திய கையால் குத்துதல், ஒரு பொருளாலோ அல்லது ஆயுதத்தாலோ தாக்குதல், மோசமான குளிரில் அல்லது வெய்யிலில் வெளியே அனுப்புதல், நிர்ப்பந்தமாக ஓர் இடத்தில் தடுத்து வைத்தல், தகுந்த உடல் நல பராமரிப்பு வழங்க மறுத்தல் போன்றவை உடல் ரீதியான தாக்குதலுக்குள் அடங்கும்.

முதியோரை அசட்டை பண்ணுதல்:
முதியோரின் தேவைகளை வேணுமென்றோ அல்லது தவறுதலாகவோ அசட்டை பண்ணுதல். அவர்கள் வாழ்வதற்கு சகல வசதிகளும் கொண்ட வதிவிடம் வழங்க தவறுதல், தரமான உணவு, சுத்தமான உடை மற்றும் சுகாதார வசதிகள் வழங்க தவறுதல், முதியோரின் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்கள் கைத்தடி, நடை அனுகூல கருவி, சில்லுக்கதிரை, கேள்வித்துணை கருவி போன்றவற்றை எக்காரணங்கொண்டும் வழங்காமல் விடுவதன் மூலம் துன்புறுத்தல் புரியப்படுகிறது.

மருந்து சம்பந்தப்பட்ட துன்புறுத்தல்:
மருத்துவர் வழங்கிய மருந்தை அல்லது மருந்துப் பத்திரத்தை தவறாக பாவித்தல். இதில் மருந்து கொடுக்கத் தவறுதல், அளவுக்கும் அதிகமாக மருந்து கொடுத்தல் போன்றவை துன்புறுத்தல்களாகும்.

மனித உரிமை மீறல் செயல்கள்:
கனடிய மனித உரிமை சாசனம் வழங்குகின்ற அல்லது ஐக்கிய நாடுகள் பிரகடனப் படுத்தியுள்ள மனித உரிமைகளை முதியவர்களுக்கு மறுக்கும் பொழுது அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். தகவல்களை மறைக்கும் பொழுது, அவர்களது சுதந்திர நடமாட்டத்தை தடுக்கும் பொழுது, அவர்களது கடித தொடர்புகளுடன் குறுக்கிடும் செயல்கள் போன்றவற்றால் முதியோர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட துன்புறுத்தல் செயல்கள் பலவற்றால் எம் முதியோர்கள் பலர் பாதிப்புக்குள்ளாகலாம். பிள்ளைகளுக்கு எவ்விதமான பாதுகாப்பை சட்டமும் சமுதாயமும் வழங்கியுள்ளதோ அதேபோன்ற பாதுகாப்பை முதியோர்களுக்கும் சட்டம் வழங்கியுள்ளபோதும் நம் சமுதாயம் பாதுகாப்பை முதியோர்களுக்கு வழங்க அநுசரணை புரிகிறதா என்பது கேள்வியாகவுள்ளது.

நம் சமூகத்தில் இடம் பெறுகின்ற முதியோர் துன்புறுத்தல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் அக்கறையுடன் முயற்சி எடுக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# வீடு
# மனித மேம்பாடுகளின் மையம்

வீடு, இல்லம், அகம், மனை, வதிவிடம், ஆத்து வதிவிடத்தைக் குறிக்கும். வேடர் இடையர் நிலை தாண்டி, ஆற்றோர வாழ்வு துவங்கும் போது நிலையான வாசம் மேற்கொள்ளப்பட்டது. ஒரு மனையோ, கொட்டிலோ, குடிலோ அமைத்து வாழ்ந்த மனிதம் ஒரு புனிதமான வாழ்க்கைக்கு அடிகோலிய இடம் வீடு தான். தமிழினம் தன்னை வளர்த்தெடுத்த தொட்டிலாகக் கொள்வது வசிப்பிடத்தைத் தான். மனித பண்பாட்டியலின் வித்திட்ட இடமே வீடு. வதிவிடமாகக் கொள்ளும் அதேவேளை வாழ்ந்து காட்டிய மண்ணும் இதே. இந்த மண்ணின் வாசனை தமிழினத்தின் சொத்து முதுசொம் எனலாம்.

இல்லறத்தோடு தொடர்புடைய வீடு, விடுதலையின் நிலைக்களனுமாம். சொந்த பந்தங்களினின்று விடுபட்டு சுதந்திரமான வாழ்வை அமைக்கவும், சுகந்தமான துறவு மேற்கொண்டு இந்த ஆத்மா பரலோகம் காண ஆற்றுப்படுத்தியதும் இதே. ஆகவே வீடு விடுதலையென்ற பொருளிலும் பயின்று வருகின்றது. "விட்டு, விடுதலை ஆகி நிற்பாய் இந்தச் சிட்டுக் குருவியைப் போல்" எனச் சுதந்திர கீதம் பாடினார் பாரதி. அறம் பொருள் இன்பம் வீடு நான்கு படிகள். அது நான்கு புருஷார்த்தங்கள். இதை குமரகுருபரர் வடிப்பிற் காணலாம்.

அறம் பொருள் இன்பம் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை
நீதிநெறி விளக்கம் 2

சுருக்க உரை:- கல்வியானது அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை ஒருவனுக்கு அளிக்கும்; உலகத்தில் குற்றமில்லாத புகழையும் உண்டாக்கும். துன்பம் ஒன்று உண்டானால் அதைப் போக்குதற்கும் உதவும். (கவல்- துன்பம்) சிறிய, உயிர்களான மக்களுக்கு அக்கல்வியைப் போற் சிறந்த துணை வேறில்லை. உற்றுழி - துன்பம் உண்டான இடத்து வள்ளுவனார் வடித்த வாழ்க்கைத் தருமத்தின் படித்துறையின்படி, அறம், பொருள், இன்பம் மூன்றும் பழுதின்றி நடந்தேறின் வீடு (நோக்கம்) தானே வந்தமையும். இந்த உண்மையைத் தமிழ் மூதாட்டி வெகு இலாவகமாக அறிமுகம் செய்தார்.

ஈதல் அறம்தீவினைவிட் டீட்டால்பொருள்
காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு
பட்டதே இன்பம், சிவனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்பவீடு.

விசிட்டாத்துவைதம் என்ற கொள்கையை உருவாக்கிய இராமனுசர் யாவும் கண்ணனுக்கே அர்ப்பணம் என்றார்.
சேமநல்லீடும் பொருளும் தருமமும், சீரியநற்
காமமும் என்றிவைநான்கென்பர்; நான்கினும்
கண்ணனுக்கே
ஆமது காம் அறம் பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
வாமனசீலன், இராமா னுசனிந்த மண்மிசையே

இராமானுச நூற்றந்தாதி 40

ஆக நாகரிகமான இனத்தைக் கட்டியெழுப்பி, பிழைகளினின்றும் காவல் செய்து, பொருண்மியங்களை நிறைவாக்கி மனித விழுமியங்களை விளைவாக்கி, நிகரலாபம் கண்டு, இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவித்து நிறைவு கண்ட அடித்தளம் எம் வதிவிடமான வீடுகள் தான். இன்று வாஸ்து என்று பேசப்படும் மனையடி சாத்திரத்தின் அடித்தளத்திற் சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்த கிராமங்கள் உருவானதே, ஊற்றெடுத்ததே வீடுகளிலேதான். மண்குடிசையாய் இருக்கலாம், கல் வீடாகலாம், சிறிது இடாம்பீகமான மாளிகையாகலாம்.

எம்மை உருவாக்கி உருப்படியான வாழ்க்கையை அறிமுகம் செய்த புனித பூமி எம் இல்லங்களும், கிராமங்களுமே. அந்த அடிபபடையிலே தான் வீடு மனித மேம்பாடுகளின் மையம் (நடுவண்) என்றோம்.

இந்த உயிர்மூச்சுள்ள வாழ்வினை உருவாக்கிய சிற்பிகள் பலர். நல்ல பழக்கவழக்கங்கள், ஒழுகலாறுகள், மனித மேம்பாடுகளோடு அயராது உழைத்தவர்கள் ஆசிரியப் பெருந்தகைகள். ஊதியம் கருதாது கல்வியை அளித்த அப்பெருமக்கள் தமிழ்ச் சமூதாயத்தின் சிற்பிகளே.

நாம் தனிமரங்களன்று. தனிமரம் தோப்பாகாது. நாம் அவற்றின் தூண்கள். எங்கள் வீட்டின் ஒவ்வொரு உறுப்பினரும் எம்மை ஆளாக்கி, நம் வாழ்வைக் கண்டு அகமகிழ்ந்தவர்கள். ஒவ்வொருவரும் உத்தரவாதத்தோடு கருமம் ஆற்றியவர்கள். எம் கூட்டுவாழ்வில் எம் கிராமத்தில் வாழ்ந்த உறவினர் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். பொருளாதார முடையும், நோயும் எம்மை வாட்டியவேளை தாமே தேடிவந்து உதவினர். அது அங்கு இருந்த பந்த சொந்தம். சுற்றம் சூழ வாழ்வையே அமைத்ததும் இதற்காகவே.

நம் கிராமத்தவர்கள் மட்டுமன்றி அயற்கிராமத்தவரும் நம் பிழையான பொருந்தாத சமூகவிரோதமான செயற்பாடுகள் கண்டு எம் பெற்றோருக்கு கூறி எம்மை ஆளாக்கினர். சின்னம்மா பெரியம்மா, சித்தப்பா, பெரியப்பா, பாட்டன், பாட்டி, மாமன், மாமியென்று பலர் எம் நலனிலே அக்கறையாக இருந்தனர்.

நாம் நடந்து வந்த பாதையையும் கடந்து வந்த இடையூறுகளையும் நாம் ஓய்வாய் இருக்கும் போது அசை மீட்டுப் பார்க்கிறோம். பிறர் வாழ நாம் வாழுவோம். பிறர் போற்ற நாம் வாழுவோமாக.

வாழு வாழவிடு.

இறைவன் அருட்குடைக்கீழ்
எல்லோருமின்ப நிறைவுற்று வாழ்வோம்
நிதம் - கவியோகி சுத்தானந்தா.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# ஆறாத் துயரம்

நான் பல சமயங்களில் பலர் ஆறாத் துயரம் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன் எழுதியிருப்பதை படித்துமிருக்கிறேன். நான் நேரில் கண்ட சம்பவம் ஒன்று இரண்டு நாட்கள் முன்புதான் நடந்தது.

என் நண்பர் ஒருவர், போலந்துக்காரர், உடல் நலமில்லாமல் இருந்தார். வயது எண்பதுக்கு மேலே. பல மாதங்களுக்கு பிறகு ஆளை நேரில் பார்த்த நான் திடுக்கிட்டேன். எடை சரி பாதியாகக் குறைந்துவிட்டதென அவரே சொன்னார். உடைகள் ஆணியில் கொழுவிவிட்டதுபோல உடம்பில் தொங்கின. நீளமான கழுத்து சட்டென்று நடுவிலே வளைந்துபோய் கிடந்தது. மிகக் களைப்பாகக் காணப்பட்டார். இரண்டு வாக்கியத்துக்கு ஒருமுறை வாயை திறந்து காற்றை விழுங்கிவிட்டு பேசினார்.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் கனடாவுக்கு வந்தவர். 60 வருடங்களை கனடாவில் கழித்துவிட்டார். தன்னுடைய இளவயதுச் சம்பவங்களை தொட்டு பேசிக்கொண்டு வந்தவர் தன் தகப்பனார் புறா வளர்த்த கதையை சொன்னார். நிறைய புறாக்களை வளர்த்து விற்பதை ஒரு பொழுதுபோக்காக அவர் செய்தார். தூது ஓலை கொண்டுபோகும் புறாக்களுக்கு பயிற்சி கொடுப்பதில் வல்லவர். ஓய்வு நாட்களில் புறாவை எடுத்துக்கொண்டு ஒரு மைல் தூரம் சென்று அதை ஆகாயத்தில் எறிந்துவிடுவார்கள். இவர்கள் திரும்பமுன்னர் அது பறந்து கூட்டுக்கு வந்துவிடும். சிறிது சிறிதாக தூரத்தைக் கூட்டிக்கொண்டே போய் பயிற்சி கொடுப்பார்கள். அவர் சொல்லத் தொடங்கினார். 'அப்பாவிடம் ஒரு அழகான புறா இருந்தது. வெள்ளை நிறம், அதற்கு நான் அல்பிங்கா என்று பெயர் சூட்டினேன். போலிஷ் மொழியில் அல்பிங்கா என்றால் வெள்ளை என்று பொருள். நாங்கள் வளர்த்த புறாக்களில் அதைப்போல அழகான ஒரு புறாவையோ மூளைத்திறன் கொண்ட பறவையையோ நான் கண்டதில்லை. அந்தக் காலத்து அரசர்கள் கடிதங்களில் செய்திகள் அனுப்புவது இப்படியான புறாக்களில்தான். அப்பாவுக்கும் எனக்கும் இந்தப் புறாவில் தனி ஈடுபாடு இருந்தது. எந்த திசையில் கொண்டு சென்று விட்டாலும் அல்பிங்கா வீட்டுக்கு வந்துவிடும்.

அப்பாவுக்கு அடுத்த ஊரில் ஒரு நண்பர் இருந்தார். அவர் பெயர் ப்ரனிஸ்லோ. எப்பொழுது அப்பாவைச் சந்திக்க வந்தாலும் அப்பாவிடம் அல்பிங்காவை பற்றி பேசுவார். அதை தனக்கு விற்கச் சொல்லி அப்பாவை வற்புறுத்துவார். அதற்காக என்ன விலை கொடுக்கவும் அவர் தயாராக இருந்தார். நான் அந்தப் புறாவில் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன் என்பதை அப்பா அறிவார். பள்ளிக்கூடத்தில் இருந்து வந்ததும் என்னுடைய முதல் வேலை அல்பிங்காவை எடுத்து கையிலே வைத்து கொஞ்சுவதுதான். ஆகவே அப்பா நண்பரின் வேண்டுகோளைத் தட்டிக்கொண்டே வந்தார்.

1939ம் ஆண்டு செப்டம்பரில் ஜேர்மனி போலந்தின்மேல் படையெடுத்தது. இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்தது அப்படித்தான். போலந்து ஒரு மாதத்தில் முற்றாக வீழ்ந்தது. ஒரு வருடத்திற்குள் நிலைமை மிக மோசமானது. எங்கள் குடும்பம் பெரியது. அப்பாவினால் செலவுகளை சமாளிக்க முடியவில்லை. நான் பள்ளிக்கூடத்தில் இருந்தபோது ஒரு நாள் அப்பா ப்ரனிஸ்லோவுக்கு புறாவை நல்ல விலைக்கு விற்றுவிட்டார். அதில் வந்த பணம் எங்கள் வீட்டுக்கு இரண்டு மாதத்திற்கு சாப்பாடு போட்டது என்று அப்பா பின்னாளில் சொன்னார். பள்ளியிலிருந்து வந்த நான் அப்பா புறாவை விற்றதைக் கேள்விப்பட்டு அப்படியே மனமுடைந்து போனேன். ஒரு முழு நாள் சாப்பிடாமல் பட்டினி கிடந்தேன். ஒரு துண்டு ரொட்டிக்கு சிரமப்பட்ட அந்தக் காலத்தில் பட்டினி கிடப்பதில் எந்தவித பொருளும் இல்லை.

ப்ரனிஸ்லோவுக்கு புறாவை விற்றபோது அப்பா ஒரு விசயத்தை அவருக்கு தெளிவாகச் சொல்லியிருந்தார். இந்தப் புறா பயிற்சி கொடுக்கப்பட்டது. அதி புத்திசாலி. இது திரும்பவும் எங்கள் வீட்டுக்கு வந்தால் அதை நான் இன்னொருமுறை உங்களுக்கு தரமாட்டேன். அவரும் சம்மதித்தே அதை வாங்கிப்போனார்.

இரண்டு வாரம் ஓடிவிட்டது. ஒருநாள் காலை நான் பாடசாலைக்கு புறப்பட்டேன். வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்ததும் அப்படியே திடுக்கிட்டு நின்றேன். நான் வளர்த்த அல்பிங்கா திரும்பி வந்துவிட்டது. வாசலிலே நடுங்கிக்கொண்டு நின்றது. கழுத்தை சரித்து நிமிர்ந்து பார்த்தபோது விழுந்துவிட்டது. இரண்டு கைகளிலும் அதை தூக்கியபோது இருதயம் துடிப்பதுபோல துடித்தது. அதனுடைய இரண்டு இறக்கைகளும் வெட்டப்பட்டிருந்தன. அப்படியும் 17 மைல் தூரத்தை அது இரண்டு வார காலமாக நடந்தே கடந்திருந்தது. புறா கிளையில் உட்காரும் பறவை என்பதால் அதற்கு காலின் முன்பகுதியில் மூன்று விரல்களும் பின்பகுதியில் ஒரு விரலும் இருக்கும். கிளையில் பிடித்து உட்கார வசதியாக. அல்பிங்கா நடந்து வந்ததில் பின் விரல் முற்றாக தேய்ந்துவிட்டது. முன்விரல்கள் பாதியாக மழுங்கிப்போய் ரத்தம் கசியக் கிடந்தன. நிற்க வைத்தபோது அல்பிங்கா நிற்கமுடியாமல் சரிந்து சரிந்து விழுந்தது. அன்றிரவே இறந்துவிட்டது.'

இந்தக் கதையை சொன்னபோது நண்பர் விம்மி விம்மி அழத் தொடங்கினார். அவர் தன்னுடைய அப்பாவை நினைத்தாரோ, அந்தப் புறாவை நினைத்தாரோ அல்லது தன்னை நினைத்தாரோ தெரியாது. அடக்க அடக்க அவரை மீறி ஏதோ ஒன்று நடந்தது. மெலிந்துபோன அவர் உடம்பு துடிக்க எக்கி எக்கி அழுதார். 80 வயதுக் கண்களில் இருந்து நீர் கொட்டியது. நான் என் ஆயுளிலே இவ்வளவு வயதான ஒருவர் அழுததை பார்த்தது இதுவே முதல் தடவை. 60 வருடங்களுக்கு முன் இறந்துபோன ஒரு புறா. அதை நினைத்து அழுதார். ஆறாத் துயரம் என்பது இதுதான் என்று நினைக்கிறேன்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# மண்ணின் காயங்களுக்கு மருந்து

போராட்ட காலங்களில் பலதரப்பட்ட வலிகளுக்கும் நிவாரணம் அளிக்கும் நிறுவனங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி அனைத்துலக ரீதியில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

அதனால்தான் முதலாவது சண்டையின் பின் முதலாவதிலிருந்து கடைசிச் சண்டையின் பின் கடைசிவரையாகப் பாதிப்படைந்தோரில் பாதிப் பேராவது உலகெங்கும் வலி மறந்து வாழ்வதற்கு துடிப்புடன் வழி வகுக்கின்றனர்.

யுத்த களங்களில் மட்டுமல்லாது பூகம்பம், ஆழிப்பேரலை, எரிமலை போன்ற இயற்கையின் சீற்றத்தால் அனர்த்தம் இடம்பெற்ற இடங்களிலும் செஞ்சிலுவை சங்கத்தினர் மண்ணின் காயங்களுக்கு மருந்தாகின்றனர்.

செஞ்சிலுவை சங்க சீருடையான ஒரேஞ் நிற உடுப்புகளில் மருத்துவ உதவிகள் புரிவோரும் நீலநிற உடுப்புகளில் மனிதாபிமான உதவிகள் புரிவோரும் அப்பகுதிகளில் சுற்றித் திரிந்து எல்லோராலும் பார்க்க முடியாதவற்றை பார்த்து ஆவன செய்வதை எல்லோரும் பார்க்கக் கூடிய தொலைக்காட்சிகளில் அவ்வப்பொழுது பார்க்க முடியும்.

1863ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ம் திகதி சுவிட்சர்லாந்தில் செஞ்சிலுவைச் சங்கம் அங்குரார்பணம் பெற்றது. 1909இல் கனடாவில் உருவாகியது. 1919இல் அனைத்துலக செஞ்சிலுவை சங்கமாக பரந்து வியாபித்தது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 75ஆவது வயதை இவ்வருடம் அடைந்து மனித மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்கின்றது.

மனிதாபிமானம்-பாரபட்சமின்மை-நடுநிலைமை-தொண்டு-சுதந்திரச் செயற்பாடு-ஒற்றுமை-சர்வ வியாபகம் ஆகியவற்றை பிரதான கோட்பாடுகளாக் கொண்டு இன மத மொழி பேதமற்ற சேவை மனப்பான்மையுடன் சுமார் 97 மில்லியன் தன்னார்வத் தொண்டர்கள் 186 நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கத்திலுளர்.

சுவிஸ் அரசாங்கம் செய்த பெரும் உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அந்நாட்டின் தேசியக்கொடியில் வெள்ளையாக உள்ள குரிசை சிவப்பு நிறமாகவும் சிவந்த பின்னணியை வெள்ளையாகவும் மாற்றிச் செஞ்சிலுவைச் சங்கக் கொடி வடிவமைக்கப்பட்டது. ஒற்றுமை-அமைதி-நிவாரணம்-உதவி-நம்பிக்கை ஆகியவற்றை செஞ்சிலுவை சங்கக் கொடியில் காண்பதாக களத்தில் குருதி கசிந்தோர் காலத்துக்கும் கூறுவார்கள்.

செஞ்சிலுவை சங்கக் கொடியில் உள்ள சிலுவையை இஸ்லாமிய நாடுகள் ஏற்க மறுத்ததால் அந்நாடுகளில் செம்பிறை எனப் பெயர் பெற்றது. இவை இரண்டையும் நிராகரித்த இஸ்ரேல் போன்ற நாடுகள் செந்தாரகை என்ற பெயருக்காக 50 வருடங்களாக போராடி 2006 இல் அங்கீகாரம் பெற்றனர். அதிலும் அரசியலை அவதானித்தோர் செங்கதிரோன், செஞ்சுவாலை, செம்படிகம், செஞ்சக்கரம் போன்ற வெவ்வேறு சின்னங்களுக்காக இன்று வரை அமைதியாக யுத்தம் புரிகின்றனர்.

கருணையின் அடையாளமாக ஒரு சமயத்தில் சிலுவை தோன்றும். யுத்தத்தில் தர்மம் என்பதை 1961 வரை தனது இலச்சினையாக கொண்டிருந்த செஞ்சிலுவை சங்கம் அதன் பின்னர் மனிதாபிமானத்துடன் அமைதியை நோக்கி என்பதை தனது இலச்சினையாக்கியது.

1948ம் ஆண்டு முதல் மே மாதம் 8ம் திகதி செஞ்சிலுவை சங்க நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது. செஞ்சிலுவைச் சங்க நிறுவனர் ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) 1828ம் ஆண்டு மே மாதம் எட்டாம் திகதி பிறந்திருந்தார். 1901ல் நோபல் பரிசை ஹென்றி டியூனண்ட் பெற்றார். 1917லும் 1963லும் நோபல் பரிசை செஞ்சிலுவை சங்கம் பெற்றது.

துளைக்க வரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு எதிராக பிணங்களைத் தூக்கிப் பிடித்தவாறே 16 நிமிடங்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் யுத்த களங்களில் இரத்தம் ஏற்றப்படுகின்றது என்ற தகவலை செஞ்சிலுவை சங்கம் சொர்க்கத்திற்கு சோறு அனுப்புவது போல இதயமுள்ளோருக்குக் கிரமமாக அனுப்பி வைக்கத் தவறுவதில்லை.

பூமிக்குள் பூதவுடல்களை புதைத்தல், குற்றுயிராக குமுறுவோரையும் உதிரம் கசிந்து உடலம் நலிந்தோரையும் தீவிர சிகிச்சையால் பாதுகாத்தல், உயிருடன் புதைக்கப்பட்டோரின் ரோமம் கருகும் வாசனையை முகர்ந்தே தோண்டி எடுத்துத் துடைத்தல், சிறைப்பட்டோரை பார்வையிடல், காணாமல் போனோரை தேட முனைதல், நோயாளிகளை மருத்துவ மனையில் சேர்த்தல், நிவாரணப் பொருட்களை வழங்கல், தற்காலிக கூடாரங்களை அமைத்தல் எனப் பலவற்றை முடிந்து விட்ட யுத்தமாக கருதப்படும் முடியாத தமிழீழ யுத்தத்தின் இறுதிக் கணங்களிலும் செஞ்சிலுவைச் சங்கம் செய்து முடித்திருப்பது என்றும் மனதில் வீறு கொண்டு எழும்!

உலகமெங்கும் மரணத்துக்கு சில அங்குல தூரத்தில் அமர்ந்து பேய்களின் கூத்தைப் பார்க்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வாழ்க்கை மீது நிரந்தர நம்பிக்கை தருகின்றனர்! ●

## மே 8ஆம் திகதி அன்னையர் தினம்

உலகம் முழுவதும் அன்னையர் தினம் இந்த மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# அழிவறியா அறவழி

14

'அன்பின் வழியது உயிர்நிலை' என ஆன்றோர் கூறிவந்த போதும், போரைச் சந்திக்காத பூமிப்பரப்புகளே இல்லை எனலாம். உலக வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாகவே போர் திகழ்கின்றது.

'போரைத் தவிர்த்து விடுங்கள்" என்றுரைத்த சான்றோர் பலரும், போருக்குத் தடை விதிக்கவில்லை.

மாறாக, போர் அறம் உரைத்துப் போயிருக்கின்றனர். அன்பின் பெருமையைப் போற்றிய திருவள்ளுவர், போரின் சிறப்பையும் உயர்த்திப் பேசியிருக்கின்றார்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

என்கின்றார். நிலம் பறிக்கப்படுகின்றபோது, உரிமை மறுக்கப்படுகின்றபோது, போர் ஏற்படுவது இயல்பானதென, புலவோர் பலரும் கூறிப்போயிருக்கின்றனர்.

தமிழர் போர் முறை தனித்துவமானது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியமே, தமிழர் போர் முறைக்கும் இலக்கணம் வகுத்திருக்கின்றது.

தொல்காப்பியத்தின் புறத்திணையியலில், வெட்சி, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய பகுதிகள் தமிழர் போர் நெறிகளை எடுத்தியம்புகின்றன.

பசுநிரைகளைக் கவர்ந்து வருதல் வெட்சி.
மண்ணைப் பறிக்க முயன்ற பகைவர் மீது, படை எடுத்துச் செல்வது வஞ்சி.
பகைவர் மதிலைச் சுற்றி வளைத்து முற்றுகையிடுவது, உழிஞை.
இரு சாராரும் போரிடுதல் நொச்சி.
போரிட்டு மடிதல் தும்பை.
போரிலே வெற்றியடைந்து வாகைப்பூ சூடுதல் வாகை.

பசுக்களும், பசுவின் இயல்பையுடைய அந்தணர்களும், பெண்களும், நோய் கொண்டோரையும், இறந்தோர்க்கு கடன் செய்வதற்குரிய பிள்ளைகளைப் பெறாதோரும் எம் அம்பு தாக்குவதற்குரியவர் அல்லர், எனும் பொருள் அமைய, நெட்டியமையார் எனும் புலவர் பாடுகின்றார்.

'ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்பொற் புதல்வர் பெறாஅதீரும்
எம்அன்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்" புறம் 9

போரின்போது, போற்றத்தக்க அறங்கள் தமிழரால் கைக்கொள்ளப்பட்டன. கோழைகளையும், முடி கலைந்தோரையும், பெண் பெயர் கொண்டவரையும், ஆயுதங்களைக் கை நழுவ விட்டவரையும், ஒத்த கருவிகள் வைத்திராதோரையும், தமிழர் கொல்லார் என, நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர் கூறுகின்றார்.

கண்ணகி கடும் சினத்தோடு மதுரைக்குத் தீயிட முயன்ற போதும், போரின் அறத்தைக் கடைப்பிடிக்கின்றாள்.

பசு, பத்தினிப் பெண்கள், மூத்தோர், பிள்ளைகள் போன்றோரைத் தவிர்த்துப் பற்றியெரியுமாறு, தீக்கடவுளுக்கு ஆணையிடுகின்றாள்.

போரின்போது, அறம் தவறுவதையும், போருக்குப் பொருத்தமற்றோர் அழிவதையும் தமிழர் விரும்பவில்லை என்பதையே தமிழர் போரியல் எடுத்தியம்புகின்றது.

அன்றைய நாளில் தமிழர் கைக்கொண்ட பல போரியல் அறங்களே, இன்று உலகளாவிய வகையில் போரியல் விதிகளாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

எனினும் இந்த விதிகளை மிதித்தழிக்கும் பேயரசுகள் பூமியில் இன்றும் உள்ளன.

மெய்யியலும், அறிவியலும் கோலோச்சும் இன்னாளில், அறவழி தவறி, கொலைவெறி கொண்டு, போர் அறியாத் தமிழரை அழித்தொழித்த கொடுங்கோன்மை நடந்தேறி ஆண்டிரண்டாகின்றது.

கொலை வெறியர் குதறிய குரல்களின் ஓலங்கள் பிரபஞ்சச் சுவர்களில் இப்போதும் எதிரொலிக்கின்றன. மனிதம் பேசுகின்ற மொழிகள் செவியிழந்து கிடக்கின்றன.

அறநெறி தவறியோரை நின்றழிக்கும் அறவழி, என்றும் அழியாது.
அறத்தொடு வாழ்ந்தனர் தமிழர்.
அறத்தொடு நின்றனர் தமிழர்.
அறத்தொடு எழுவர் தமிழர். ●

## 'ஒன்ராறியோ பிளேஸ்' இலவச அனுமதி

ரொறன்ரோ மையப் பகுதியில் அமைந்துள்ள 'ஒன்ராறியோ பிளேஸ்' கோடை விடுமுறையில் மக்களின் சுற்றுலாவுக்குப் பயன்படும் ஓர் முக்கிய இடம். இதனைப் பார்வையிட கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் இவ்வருடம் இதன் 40வது ஆண்டு பூர்த்தி என்பதால், இந்தக் கோடை விடுமுறையில் அனுமதி இலவசம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் மே மாதம் 21ஆம் திகதியிலிருந்து நவம்பர் 13ஆம் திகதி வரை 'ஒன்ராறியோ பிளேஸ்' திறக்கப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது எப்பிடி இருக்கு?

## ஆட்சி அதிகார நாற்காலியில் அமரப்போவது யார்?

உலகத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஐ.நா. சபை அறிக்கையின் விவரங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிட்டன. ஈழத்தில் தமிழினம் இரக்கமற்ற முறையில் கொன்று குவிக்கப்பட்டதற்காக, ராஜபக்ஷே அரசு சர்வதேச நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும் நேரம் நெருங்கிவிட்டது. 'ஆட்சி அதிகார நாற்காலியில் அமரப்போவது யார்?' என்ற போட்டியில் கடுமையாக ஈடுபட்டுக் களைத்துப்போன நம் தலைவர்கள், தேர்தல் முடிவை எதிர்பார்த்து இளைப்பாறும் வேளையில், பொழுதுபோவதற்கு ஈழம் குறித்த லாவணிக் கச்சேரியில் இறங்கிவிட்டனர்!

கலைஞரும் ஜெயலலிதாவும், 'ஈழத் தமிழரின் இன்னல் குறித்து இங்கு இருந்தபடியே அதிகமாக இரு விழி நீர் ஆறாகப் பெருக்கியவர் யார்?' என்று அறிக்கைப் போர் நடத்தத் தொடங்கிவிட்டனர். 'இன்னொருவர் வேதனை இவர்களுக்கு வேடிக்கை இதயமற்ற மனிதருக்கு இதுவெல்லாம் வாடிக்கை' என்ற பாடல்தான் நெஞ்சில் நிழலாடுகிறது.

## இனப்படுகொலையை வேடிக்கை பார்த்தவர்கள்

'இலங்கையில் நடந்த இனப் படுகொலையை வேடிக்கை பார்த்ததற்காக, கருணாநிதி பொது மன்னிப்பு கேட்க வேண்டும்' என்றார் ஜெயலலிதா. 'நடந்த கொடுஞ்செயலுக்கு எதிராக சர்வதேச அளவில் கூக்குரல் எழுப்பப்பட்டதோடு மட்டுமல்லாமல், இலங்கை அதிபர் ராஜபக்ஷே சர்வதேச நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, போர்க் குற்றத்துக்காக விசாரிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இந்திய அரசோ, தமிழக அரசோ, இது குறித்து எதிர்ப்பையோ அல்லது வருத்தத்தையோகூட தெரிவிக்கவில்லை' என்று குற்றம் சாட்டுகிறார் முன்னாள் முதல்வர். 'இந்திய அரசு இலங்கைக்கு உதவியது, இந்திய அரசுக்குக் கலைஞர் உதவிக் கரம் நீட்டினார்' என்பது யாராலும் மறுக்க முடியாத உலகறிந்த உண்மை. ஆனால், வன்னிப் பகுதியில் தமிழருக்கு எதிராக இலங்கை ராணுவத்தின் வெறியாட்டம் நிகழ்ந்தபோது, முள்ளி வாய்க்காலில் எம் இனம் முற்றாக அழித்து ஒழிக்கப்பட்டபோது ஜெயலலிதா என்ன செய்தார்? 'ஒரு கோடிக்கு மேல் உறுப்பினர்கள் உள்ள அரசியல் அமைப்பு அ.தி.மு.க.' என்று அடிக்கடி அறிவித்துப் பரவசப்பட்டுக்கொள்ளும் 'புரட்சித் தலைவி' மாநிலம் முழுவதும் லட்சக்கணக்கில் தன்னுடைய தொண்டர்களை வீதியில் நிறுத்தி இந்திய அரசுக்கு எதிராக ஏன் போர்க் குரல்



மூன்று மணிநேர உண்ணாவிரதம்

கொடுக்கவில்லை? நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், 'இந்திய ராணுவத்தை அனுப்பி ஈழத்தைப் பெறப் பாடுபடுவேன்' என்று திடீரென்று சன்னதம் வந்ததுபோல் மேடைகளில் ஆவேசக் குரல் கொடுத்த 'அம்மா', தேர்தல் முடிவுகளுக்குப் பின்பு ஈழம் குறித்து இதழ் திறந்து இரண்டு வார்த்தைகள்கூட இயம்பாமல் மௌனத் தவம் இயற்றியது ஏன்? ஈழம் பற்றி ஜெயலலிதா பேசுவது தகாது. அப்படியானால், 'தமிழினத் தலைவர்' கலைஞர் பேசுதல் தகுமா?

## கை வலிக்கக் கடிதங்கள்; மழையில் நனையாத மனிதச்சங்கிலி

ஈழத் தமிழர் நலன் காக்க இன்று வரை கலைஞர் செய்த அளப்பரிய சேவைகளை, எண்ணிலடங்காத தியாகங்களை, கை வலிக்க எழுதிய கடிதங்களை, மாநாடுகளில் நிறைவேற்றிய தீர்மானங்களை, நெஞ்சு வலிக்க மேடைகளில் முழங்கிய வீர முழக்கங்களை, மூன்று மணி நேரம் பசியடக்கி நடத்தி முடித்த உண்ணாவிரத சாகசங்களை, மக்கள் மழையில் நனைந்தபடி மனிதச் சங்கிலியாய் நிற்க, காரில் அமர்ந்தபடி பார்வையிட்ட வெஞ்சமர் வேள்வியை விரிவாக விளக்கி அறிக்கை வடிவத்தில் அளித்து இருக்கிறார்.

கலைஞரின் தியாகப் பயணத்தின் திருப்பு முனை நிகழ்வுகளில் ஓர் அரிய அரசியல் உண்மை புதையுண்டு கிடக்கிறது. எம்.ஜி.ஆர். 1977 முதல் 1987 வரை முதல்வராக இருந்தபோது, கோட்டை நாற்காலியில் அமர முயன்றும் கலைஞரால் கோபாலபுரத்தில்தான் முடங்கிக்கிடக்க நேர்ந்தது. அவர் பட்டியலிடும் போராட்டங்களின் புறமுகம் 'ஈழ மக்கள் ஆதரவு' என்றாலும், அவற்றின் உண்மையான சுயமுகம் 'எம்.ஜி.ஆர். எதிர்ப்பு' என்பதுதான் அரசியல் சூட்சுமம்!

ஈழத் தமிழருக்காக 1977-ல் சென்னையில் 5 லட்சம் பேரையும், 1983-ல் 7 மணி நேரத்தில் 8 லட்சம் பேரையும் திரட்ட முடிந்த கலைஞரால், செப்டம்பர் 2008 முதல், மே 2009 வரை ஈழ நிலத்தில் தமிழர் ரத்தம் வெள்ளம் எனப் பாய்ந்தபோது, எண்ணற்ற குலப் பெண்டிர் கற்பிழந்து கதறித் துடித்தபோது, சின்னஞ்சிறார்கள் சிதைக்கப்பட்டபோது, உறுப்பிழந்து - உடைமையிழந்து - வாழ்விழந்து வதை முகாம்களில் மூன்று லட்சம் தமிழர் நரகத்தின் பாழ்வெளியில் நடைப்பிணங்களாக உருக்குலைந்தபோது, வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்ற நடேசனும், புலித்தேவனும், நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்களும் கொன்றழிக்கப்பட்டபோது, தமிழகத்தின் வீதிகளில் கழக உடன்பிறப்புகளைப் போர் நிறுத்தம் வேண்டி லட்சக்கணக்கில் திரட்டி இந்திய அரசுக்கு நிர்ப்பந்தம் தரமுடியாமற் போனதன் பின்னணி என்ன?!

## இராஜினாமா நாடகமும் வீர முழக்கங்களும்

'இரு வாரங்களில் ஈழப் போர் நிறுத்தப்படாவிடில், 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமா செய்வார்கள்' என்று அறிவித்துவிட்டுப் புறநானூறு பேசியவர்கள், அதை நடைமுறைப்படுத்தாமல் புறமுதுகிட்டதின் மர்மம் என்ன?!

எம்.ஜி.ஆர். இருந்தபோது கலைஞர் ஈழ மக்களுக்காக அணி திரட்டியது, முதல்வர் நாற்காலியைக் கைப்பற்றுவதற்காக!

(26ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழினியன்'

# மும்முரமாய்த் தொடர்கிறது முள்ளிவாய்க்கால்!

வெற்றிக் கனிபறிக்கும் வேளைவந்தும் தூங்குவதா?
இற்றைப் புலத்தமிழர் இறங்கிடுவோம் வீதிகளில்!
அன்றாடம் தமிழர் அழிப்புண்ணும் இனக்கொலையை
நின்றிந்த வீதிகளில் நீள்புவிக்கே வெந்துரைப்போம்!
முடியவில்லை கொலைகள் முள்ளிவாய்க்கா
லோடு!இன்றும்
தொடர்கின்ற உண்மைநிலை சொல்லிடிவோம்
ஆர்த்தெங்கும்!
செய்தான் கொலைகளெனத் தெளிந்துள்ள தின்றுலகம்!
செய்கின்றான் கொலைகளென்றும் தேரவைப்போம்
சாட்சியுடன்!

யாழ்குடா வில்இரு மாதத்தில் ஐம்பதுபேர்
ஆள்கடத்த லால்தொலைந்தார்! அந்தத் தமிழர்களில்
பதினெண்மர் மீண்டார் பாழும் சடலங்களாய்!
இதுமாசி, பங்குனியாம் இருமாத இனஅழிப்பு!
பத்துத் தமிழர்க்கோர் படைஞன்யாழ்க் காவலிலே!
இத்தினம் வரையங்கே ஏராளம் இராக்கொள்ளை!
வன்னியிலே படையினரால் மாணவியர் பாலியலில்
வன்முறைக் கன்றாடம் வழிகளிலே ஆளாதல்!
வன்னிஇளம் பெண்கள் மனைக்குள் முடங்கியுள்ள
அந்நிலைமை நேரில்போய் அறிந்துசொன்னார் ஓரறிஞ
என்றுமில்லா வாறு இளம்ஈழ மாணவியர்கள்
கொன்றொழிக்கப் படுகின்றார் கொள்கரவுக் கணவரினால்
என்றால் - யாழ்ச் சிறுமியர்கள் ஏராளம் கருவுற்றார்
என்றால்நாய்ப் படைகள்தான் இவற்றுக்குக் காலன்றோ?
இனஅழிப்பை மறைமுகமாய் இவ்வாறும் மேற்கொள்ளும்
இனவெறிச்சிங் களம்பற்றி இவ்வுலகுக் கறிவிப்போம்!

"இராணுவ ஆட்சியிலே யாழ்குடா! படை, காட்டு
மிராண்டித் தனங்கள் மேலாண்மை!" எனஇன்றை
மக்களின் துயரநிலை மதகுருமா ருக்குரைத்த
அக்குரு கரித்தாஸ் ஜெயகுமார் அடிகளினைக்
குண்டர்கள் தம்மை கொண்டிழிவு படுத்தியமை,
சண்டிச்சிங் களரனுப்பித் தமிழர்களைத் துன்புறுத்தல்,
உண்மைசொலும் ஊடகங்கள், ஊடகர்வாய் பூட்டிடுதல்,
அண்மையிலே சிறீதரனை அழித்துவிட முயன்றசதி,
இனஅழிப்பை மறைமுகமாய் இவ்வாறும் நடத்துகின்ற
இனவெறிச்சிங் களம்பற்றி இவ்வுலகம் உணரவைப்போம்!

யுத்தம் முடிந்தாண்டு ஓரிரண்டு போனபின்னும்
எத்தனையோ தமிழ்ப்பள்ளி இராணுவ முகாமின்றும்!
பன்னூறு தமிழ்ச் சிறுவர் படிப்பில்மண் இதனாலே!
வன்னிச் சிறார் கல்வி வசதியற்றுக் கூலிகளாய்,
ஓரினம்பல் நூற்றாண்டாய் உறைமண்ணுள் வேறான
ஓரினத்தைக் குடியேற்றல் உலகின்சட் டப்படியோர்
மனிதஉரிமை மீறல்! மண்கொள்ளை மகிந்தாவோ
மனம்போன போக்கினிலே வன்னிமுறி கண்டியிலே
குடியிருந்து போரால் குடிகலைக்கப் படுதமிழர்
குடிகுந்தல் தடுத்துக் குடிவைத்தான் சிங்களரை!
முள்ளு வேலி முகாமின்றும் முடக்கியுள்ள
முள்ளி வாய்க்கால், மாத்தளன் முற்குடிகள்
இரண்டா யிரம்,குடி யேறத் தடை போட்டான்!
பரிந்தே,தன் சிங்களர்க்கெம் பல்லூர் பறித்தீந்தான்!
எங்கிருந்தோ, எவ்வூரித்தோ, எத்தொடர்போ அற்றவராம்
சிங்களவர் வந்தெங்கள் சிற்றூர்நா வற்குழியில்,
யாழ்மணி யந்தோட்டத்தில் அடாத்தாய்நம் மனைகுந்த

வாழ்வளங்கள், பாது காப்பும் வழங்குகிறான்!
படைமுகாங் கள்பெயரில் பல்லாயிரம் ஏக்கர்
வட,கிழக்கில் சிங்களர் வன்குடி யேற்றங்கள்!
பிக்குமார், படையோர், பிச்சைக்கைக் கூலிகள்நம்
மக்களை அச்சுறுத்தி வயல்,மனைகள் பறிக்கின்றார்!
சந்ததிசந் ததியாகத் தமிழீழக் கடல்களிலே
எந்தமிழர் மீன்பிடித்தார்! இன்றெனிலோ சிங்களவர்
அரசின் படைகாப்பில் அட்டகாசம் செய்கின்றார்!
பெரிதும்நம் மீனவரோ பிழைப்பின்றிப் பட்டினியில்!
இடுக்கண், இன்னல்கள் இடையறா மல்செய்து,
ஒடுக்கி, அணுவணுவாய் உயிர்போக வைத்துவந்து,
தமிழினத்தை வேரோடு சாய்த்துவிடும் தந்திரத்தில்
திமிரேறிச் சிங்களவன் செய்யும்இச் சூழ்ச்சிகளை
உலகறியச் செய்தும், உண்மை தெளிவித்தும்
தலையிட்டு, தமிழர்கள் தற்காத்து வாழ்வதற்குத்
தனியீழத் தமிழரசு தான்தக்க தீர்வென்று
மனமாரக் கண்டெமது மண்மீட்டுத் தரவைத்து,
வெற்றிக் கனிபறிக்கும் வேளைவந்தும் தூங்குவதா?
இற்றைப் புலத்தமிழர் இறங்கிடுவோம் வீதிகளில்!

சட்டம் அமைந்தும் தமிழும்ஆட்சி மொழியென்று,
சட்டம் மீறித் தமிழ்பள்ளி களில்கூட
'சிங்களத்தில் பாடு தேசிய கீதமெ'னும்
வெங்கொடுமை! ஆணைகள் விடுவதும் சிங்களத்தில்!
போரழித்த தமிழருக்குப் புவிதந்த நிவாரணங்கள்
பாரறியச் சிங்களர்க்கே பங்கதிகம் வழங்கிட்டான்!
தொண்டு நிறுவனத்தார் தொடர்ந்தங் கிருந்திட்டால்,
கண்டுதம் இனஅழிப்பைக் காசினிக்குச் சொல்வரென்று
முன்கூட்டி யே,அவரை முறைகெட்ட தாய்ச்சாட்டி,
வன்முறையால் அகற்றி, ஊடகங்கள் வாய்பொத்தி,
இன்றுவரை தீயாய் இனமழிக்கும் சிங்களரை
வென்று தமிழீழம் விடிவிக்கக் கிடைத்துள்ள
இணையற்ற நேரமிதில் இறங்கிடுவோம் வீதிகளில்!
பணிவோடெம் அவலங்கள் பாரிற்குச் சொல்லிடுவோம்!

அறுபதாண் டுகளாய் நாலுலட்சம் தமிழரினை
வெறிச்சிங்களர் கொன்றார்! வீடுடைத்தார் இரு லட்சம்!
புள்ளி விபரமுடன் புவிக்கிவற்றைச் சொல்லிடுவோம்!
முள்ளிவாய்க் கால்பின்னும் முனைப்போடின அழிப்பில்
தீவிரங்கொள் சிங்களவன் திருந்துவதோ பகற்கனவு!
யாவர் தமிழரையும் அழித்தன்றிக் கைஓயான்!
அவன்கீழ் இருந்தால் அடியோ டழிபடுவோம்!
"புவியோரே! எங்கள் புலிக்காவல் அழிப்புண்ண
அன்று துணைநின்றீர்! அழிந்திடநாம் காலானீர்!
இன்றந்த உண்மை இனிதே விளங்கிட்டீர்!
உங்கள் தவறுக்கு குகந்த கழுவாயாய்
எங்கள் ஈழத்தை எம்கையில் தாருங்கள்!"
என்றுரக்கக் கூவி எழுவோம்ஓர் அணியாக!
இன்றேனும் கூடி ஈழம்தனை மீட்போம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# மயிலும் வான்கோழியும்

மீன் துள்ளும் ஓடையும் தேன் துள்ளும் மலர்களும் வான் துள்ளும் முகில்களும் மட்டுமல்ல கான் துள்ளும் மான்களும் கதிர் துள்ளும் மூங்கிலும் கூட நிறைந்த காட்டுவழிப் பாதையது.

முள்ளும் முடக் கல்லும் முது சருகும் சரசரக்க தெள்ளும் கடித்துலைக்கத் திரியும் வன விலங்கும் வேகமுடன் தள்ளும் தென்றலுக்கு தலை சாய்க்கும் கொடிமறைவில் வெள்ளை இளம் சிவப்பு வேறுபல நிறம் கூடிக் கொள்ளை அழகோடு குரல் காட்டும் பறவைகளும் என்று கிடந்த பாதையில்!

கவியால் கதையமைப்பால் கருத்துதிர்க்கும் கண்ணியத்தால் புவியோரைப் புடம்போட்ட பொக்கைவாய்த் தமிழ் ஆச்சி! ஆம்! கம்பனையே அட போட்டு அலட்சியமாய்ச் சிரித்த மகள்! பால் கலந்த தேன் கொடுத்துப் பதிலாக குறவள்ளி வேல் முருகன் அண்ணனிடம் சங்கத்து நூல் அறிவு தரக் கேட்ட நுண்ணறிவாள்! அவள்தான் ஔவை!

பெண்கல்விக் கலாசார பெரும்புயலாள் நடந்திட்டாள்! பொருள் தேடி அல்ல. பொருமும் தன்வயிற்றுப் பசி நீக்கும் ஊர் தேடி! நடந்தாள் மூதாட்டி! நடுக்காட்டில் மயிலொன்று!

நாணித் தலைகவிழ்ந்து நாணமுடன் மயில் இருக்க ஆணித் தரமாக அதட்டுமொரு வான்கோழி! நின்றாள் ஔவை! நிறுத்தி மூச்செறிந்தாள்! பண்பை முறித்துப் பேசியது மூளையற்ற வான்கோழி!

பனையோலை விரித்தால் போல் படமெடுக்கும் மயில் பார்க்க தினைபோலக் குவியும் திருந்தா மடைப்பயல்காள்! வெள்ளைச் சிறகெடுத்து வெளிவிரித்து நான் ஆடும் கொள்ளைக் கலைத்திறனைக் குருடர்களே போற்றீரோ! நீலக்கண் தோகை நிறம்கண்டு மயங்காதீர்! கோலக்கண் வரிபடைத்த என்தோகை பாரீரோ! சாதுவாய் அசையும் மயிலாட்டம் பார்க்காமல் மோதுமோர் புயல் போலும் முதலென்னைப் பார்த்திடுவீர். ஆடியது வான்கோழி! அழகில்லாச் சிறகடித்து!

வான்கோழி ஆட வந்திருந்த பறவையெலாம் தீன் தேடிப் பொறுக்கும் திருந்தாத வான்கோழி தான் கோடி ஆட்டம் தரணியிலே போட்டாலும் வண்ண மயிலாக வான்கோழி மாறிடுமா? எண்ணெய்த் திரியென்றும் எரிமலையாய் வெடித்த துண்டா? வெள்ளாடு தாடிவைத்து வள்ளுவனாய் ஆனதெங்கே? கரப்பொத்தான் மீசை வைத்துக் கட்டப்பொம்மன் ஆவதுண்டா?

என்றெல்லாம் எண்ணிப் பறந்ததனைத் தாய் கண்டாள். சிரித்தாள். ஔவை. சிந்தித்தாள் கண நேரம். சிறகிருந்தால் ஆடலாம் சிந்தனையில் தவறில்லை. மயில் போல ஆடிடவே மதிகெட்டு அலைவான் ஏன்? போட்டி ஆட்டமெலாம் புகழ் மறையச் செய்துவிடும். மற்றவர்கள் புகழ் கண்டு மனம் மறுகித் திமிர் கொண்டால் உலகம் சிரித்திகழும். உறவெல்லாம் அறுந்தோடும்!

காட்டு வான்கோழித் திமிர்போல நம்மிடத்தும் நாட்டு வான்கோழி திமிர்மிக்க சிலவுண்டு. கல்வித் திமிரும் கனகாசு தரும் திமிரும் சொல்லிக் கொடுத்த பட்டச் சுமைதந்த பெருந்திமிரும் துள்ளித் திரியவைக்கும் வான்கோழிக் கூட்டத்தை! எள்ளி அடுத்தவரை எடுத்தெறியத் தான் தோன்றும்!

ஆனாலும் இவையெல்லாம் கிள்ளி எறிந்த மயிர் சிலருக்கு என்பதனை வெள்ளைச் சிறகடிக்கும் வான்கோழி அறிவதில்லை. கடலைச் சேறாக்க கால் மட்டும் போதாது! மலைப்பாம்பை ஆடவைக்க மகுடியால் முடியாது. புயல் தாக்கி மலையொன்றும் புண்ணாகிப் போவதில்லை! போட்டி வேண்டாம் புத்தியற்ற மானுடரே!

ஆடும் மயில் கண்டால் அதன் வழி-யைக் குழப்பாமல் பாடும் பணிசெய்து பக்கம் துணையிருப்போம்! கூவும் குயில் என்றால் குனிந்து வரவேற்போம்! ஆடும் நாகத்தின் அருகே அரண் செய்வோம். ஊரும் எறும்புகளின் ஒற்றுமைக்கு மதிப்பளிப்போம்! கள்ளிச் செடியேனும் காதலித்துப் போற்றிடுவோம்!

இதுதானே கல்வி! இதுதானே இறையன்பு! பொறாமைச் சுடரணைக்கும் பொற்கரங்கள் இவைதானே! காழ்ப்பு மனப்பான்மை கனகாலம் வென்றதில்லை! சூழ்ச்சி தரும் சுகமும் தொலைதூரம் தொடர்வதில்லை! சொல்லிக் கொடுத்திடனும் இதையன்றோ வாழ்க்கையிலே!

பாடினாள் ஔவை பாழும் பசி மறந்து!

கான மயிலாடக் கண்டிருந்த
வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து -
தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித்து ஆடினால்
போலுமே
கல்லாதான் கற்ற கவி

காட்டிலே மழை முகிலைக் கண்டு மயிலானது தனது அழகிய தோகையை விரித்து ஆடுவதைப் பார்த்துப் பொறாமையினால் வான்கோழி எனக்கும் தோகை இருக்கிறதே நானும் மயில் போல ஆடுவேன் என்று நினைத்து தன் அழகில்லாத சிறகை விரித்து போட்டியாக ஆடுவதைப் போன்றதே கவியாற்றல் உடையவனது ஆக்கத்தைப் பார்த்து அது கல்லாதான் தனக்கும் அந்த ஆற்றல் உண்டு என நினைத்துக் கொண்டு பாடல் இயற்றுவது ஆகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# நா மணக்க!

பெற்றோர் என்றால் பிள்ளைகளிடம் கண்டிப்பாகத்தான் இருக்க வேண்டும். அதற்காக, அளவுக்கு அதிகமாக எடுத்ததற்கெல்லாம் பிள்ளைகளிடம் எரிந்து விழுவதன் மூலம், பிள்ளைகளை ஒழுக்கமானவர்களாகப் பேணிவிடலாம் என நினைத்துவிடுவது தவறு.

நாளாந்த செலவுகள் கூரையைப் பிய்த்துக்கொண்டு போகின்ற இந்த மேற்குலக நாடுகளில், பெற்றோர் இருவரும் வேலைக்குப் போய் வருவதன் மூலமே, குடும்பத்தின் பொருளாதார சுமையை ஓரளவுக்காவது பேண முடியும். எரிபொருள் விலையேற்றமும், அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வும், பெற்றோருக்கு மேலதிக சுமைகளைக் கொடுக்கவே செய்கின்றன.

அதற்காக, அந்தக் கோபத்தையும் வெறுப்பையும் பிள்ளைகளிடம் காட்ட முயற்சிப்பதும், பின்னர் கோபம் தணிந்ததும், ராசா, குஞ்சு என்று கொஞ்சிச் சமாளிப்பதும், இந்த நாட்டுப் பண்பாட்டில் வளருகின்ற பிள்ளைகளுக்கு உசிதமானதல்ல.

நாமெல்லாம் எமது ஊரில் எம் அப்பா அம்மாவிடம் எத்தனை உதை வாங்கியிருப்போம், போதாதற்கு மாமாமார், அண்ணன்மார், சித்தப்பாமார் என்று அகப்பட்ட மூத்த வயதினரிடமெல்லாம் உதை வாங்கி வளர்ந்தது உண்மைதான்.

அதையே சொல்லிச்சொல்லி, மேற்குலகில் வளர்கின்ற எமது பிள்ளைகளிடமும் அதுபோன்று கர்ச்சிப்பதும் கடித்துக் குதறுவதும், கனதியான காயங்களை இருபகுதி மனங்களிலும் நிரந்தரமாக உருவாக்கி விடும்.

வேகமான காலவோட்டத்தில், கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலுமே அதிகமான நேரத்தைச் செலவிடும் பிள்ளைகளை, அதற்கு முந்திய சில வருட பாடசாலைக் காலத்தில், இரு தரப்பு புரிதலுள்ள, பெற்றோர் பிள்ளை பாசத்தை இரு தரப்பும் பரிமாறுவதற்கு ஏதுவான ஓர் சூழலை வீட்டில் உருவாக்கிக் கொடுப்பது, பெற்றோர் என்ற வகையில் எமது கடமை. பிள்ளைகளின் வேகத்திற்கு பெற்றோரின் விவேகம் ஈடுகொடுப்பது அவசியம்.

அவர்களது பாடசாலைக் காலத்தைத் தவற விட்டால், பின்னர், அதிகாலையிலும் இரவிலும்கூட, மேலதிக வகுப்புகள் இருப்பதாகச் சொல்லி, பெற்றோருடன் செல-வழிக்கும் நேரத்தைத் தவிர்த்துக் கொள்ளவே பிள்ளைகள் முயற்சிப்பார்கள். நாம் உருவாக்கிய காயத்தை ஆற்ற, இந்த மேற்குலகில் வாய்ப்புகள் குறைவு.

எமது ஊரில், பொருளாதாரத்தில் தங்கி வாழும் சூழ்நிலை பிள்ளைகளுக்கு இருப்பதால், அவர்கள் தமது திருமணம் வரை, பெற்றோரின் நன்மைகளையும் தீமைகளையும் சகித்துக் கொள்வார்கள். பொருளாதார தங்கி வாழ்தல் சூழ்நிலை முற்றிலும் இல்லாத இந்த நாட்டில், காயங்கள் எப்போதும், உயிருள்ள வரையிலும் கூட, ஆறாத ரணமாக தகித்துக் கொண்டிருக்கும் அபாயம் இருக்கிறது.

எனவே, காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதும், பிள்ளைகளின் மனங்களில் காயமேற்படாமல் பக்குவமாகப் பரிந்து பேசுவதும், இருபக்க உறவைப் பலப்படுத்த உதவும். ●

இது எமது இனம், சமூகம், மொழி சார்ந்த விடயமல்ல. பொதுவாக பலரிடமும் காணப்படும் ஒருவித மிகச்சிறிய வியாதி என்றும் கூறலாம். எமது வாயிலிருந்து எழும் துர்நாற்றம் பற்றி எமக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், அதை நாம் கவனத்தில் எடுக்காமல் விட்டுவிடுகிறோம். நாம் உண்ணும் உணவு, அருந்தும் பானம், அல்லது எம்மில் இருக்கக்-கூடிய பல்வேறு குடல், வயிறு அல்லது வாய் சார்ந்த மருத்துவ அறிகுறிகள் காரணமாகக் கூட, எமது வாயிலிருந்து எம்மையறியாமல் துர்நாற்றம் வீச வாய்ப்பிருக்கிறது.

அதனால், காலையிலும் இரவிலும் பல்துலக்குவதுடன் நிற்காமல், ஒவ்வொரு தடவை உணவருந்திய பின்னரும் பல் துலக்குவது முக்கியமானது. இது தவிர, முக்கிய சந்திப்புக்கள் அல்லது நிகழ்வுகளுக்குச் செல்லும் போதும்,

பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போதும், எமது வாயிலிருந்து துர்நாற்றம் வரலாம் என்ற யதார்த்தத்தை நாம் மறந்து விடக் கூடாது.

புகைத்தல், மது அருந்துதல், மீன், நண்டு, கருவாடு போன்றவற்றை உண்ணும் போது, இரட்டிப்பு கவனத்தை, வாய் நாற்றத்தின் மீதும் கொண்டிருப்பது, எமக்கும் எம்மோடு பழகுவோர், எமைச் சார்ந்தோர் அனைவர் மீதான நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்காது இருக்க உதவும்.

அத்துடன், எமது பிள்ளைகள் விடயத்திலும், அவர்களது வாய் துர்நாற்றம், உடல் துர்நாற்றம், உடை அழுக்கு போன்றவற்றில் நாம் கவனம் எடுப்பது அவசியமானது. நாம் கட்டாயப்படுத்துவதால் எமது பிள்ளைகள் உண்ணுகின்ற சில நம்நாட்டு உணவுகள், அவர்களது பாடசாலையில், வேலையிடத்தில் அல்லது பொது இடங்களில் அவர்களுக்கு பல்வேறு சங்கடங்களையும் உண்டு பண்ணலாம். எனவே, எமது பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சி கருதி, துர்நாற்றம் குறித்த அதீத கவனத்தைக் கொண்டிருப்பது, நாம் வாழும் இந்த நாட்டின் சூழ்நிலைக்கு உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளை வெல்லும் ஆயுதம்

"ஓர் ஊரில் ஒரு ராஜா..." இப்படித் தொடங்கியதும் கதை கேட்பதற்காகக் குழந்தைகள் ஆயத்தமாகி விடுவர். அவர்களின் கண்களில் உற்சாகம் கரைபுரண்டோடும். அது ஒரு காலம். இன்றும் அவர்கள் விதவிதமான கதைகள் கேட்பதற்காகத் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் கதை சொல்வதற்குத்தான் ஆள்களைக் காணோம்.



கதைகள் கேட்டு வளரும் குழந்தைகளின் கற்பனை உணர்வு, செயல் திறன் அதிகரிக்கிறது. கதைகளால் அவர்களின் மனதில் தன்னம்பிக்கை, நேர்மை, ஒழுக்கம், அன்பு, சத்தியம் போன்ற நற்பண்புகள் ஆழமாக வேரூன்றுகின்றன.

வெறும் ஏட்டுக் கல்வியால் ஆவியாகிப்போகும் குழந்தைகளின் மனம் என்ற நீர்நிலையில், கதைகள் என்ற மேகங்கள் கனமழை பொழிந்து மகிழ்ச்சி அலைகளைப் பரவச் செய்கின்றன.

தேர்வு முறையை மட்டுமே வலியுறுத்தித் தயாரிக்கப்படும் பாடப் புத்தகங்கள் குழந்தைகளை வகுப்பில் தேர்ச்சி பெறச் செய்கின்றன. வாழ்க்கையில் அவர்கள் தேர்ச்சி பெறக் கதைகள் உதவுகின்றன.
இன்று பெரியவர்களின் பெரும்பாலான நேரத்தைத் திருடிக் கொள்ளும் தொலைக்காட்சிப் பெட்டிகள் எதிர்காலத் தூண்களான குழந்தைகளின் பொன்னான பொழுதுகளையும் சத்தமில்லாமல் கபளீகரம் செய்து கொண்டிருக்கின்றன என்பது மிகுந்த கவலை தரும் செய்தி.

கதைகளுக்காக ஏங்கி, தொலைக்காட்சிப் பெட்டிகளின் சீரியல்களில் மனதைத் தொலைக்கத் தொடங்கும் குழந்தைகள், காலப்போக்கில் தீயால் கவரப்பட்டு அதை நோக்கி வந்து பின்னர் அதிலேயே விழுந்துவிடும் விட்டிலைப்போல மாறிவிடுகின்றனர்.

குழந்தைகளுக்கானவை எனக் கூறிக்கொண்டு நாள் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் சேனல்களில் குழந்தைகளுக்கான, குழந்தைகளை மேம்படுத்தும் எந்த நிகழ்ச்சிகளையும் காண முடிவதில்லை. மாறாக அவையும் பிஞ்சு நெஞ்சங்களில் மேலும் நஞ்சை விதைக்கும் பணியையே செவ்வனே செய்கின்றன.

உலகமே போற்றும் உத்தமர் காந்தி நேர்மையையும், சத்தியத்தையும், கொண்ட கொள்கைகளில் உறுதி, வாக்குத் தவறாமை போன்றவற்றைக் கடைப்பிடிக்கக் காரணம் அவர் இளம் வயதில் கேட்டு வளர்ந்த கதைகளின் தாக்கமே என தங்கள் குழந்தைகளுக்குக் கூறும் பெற்றோரைப் பார்க்கலாம்.

ஆனால், அவர்களும்கூட தங்கள் குழந்தைகளுக்குக் கதைகளைச் சொல்லி வளர்க்க விரும்புவதில்லை. காரணம், பெரும்பாலான பெற்றோருக்கு பொறுமையுமில்லை, நேரமிருப்பதுமில்லை.

விவேகமும் வீரமும் ஒருங்கே கொண்ட மராட்டிய சிங்கம் சிவாஜியும் சிறுவயதில் தன் தாயிடம் கதை கேட்டு வளர்ந்தது உலகமறிந்த கதைதான்.

மனதை லேசாக்கும் நகைச்சுவைக் கதைகள், சிக்கல்களைத் தீர்த்து வாழ்வில் வெற்றிபெறச் செய்யும் புதிர்க் கதைகள், எப்படிப்பட்ட சூழலையும் எதிர்கொள்ள வைக்கும் சமயோசிதக் கதைகள் என பல்சுவைக் கதைகளைக் கேட்டு வளரும் குழந்தைகள் வருங்காலத்தை வளமாக ஆக்கிக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பள்ளியில் சேர்த்ததும் தனது கடமை முடிந்தது என்றோ, கதைப் புத்தகங்கள், குழந்தைகள் கேட்கும் ஒலி-ஒளி நாடாக்கள் வாங்கிக் கொடுத்து அவர்களைக் கேட்கச் செய்வதுடன் தங்கள் பொறுப்பு கழிந்தது என்றோ பெற்றோர் நினைத்தல் கூடாது.

குழந்தைகளுடன் அமர்ந்து கதைகளில் வரும் பாத்திரங்களாகவே மாறி அவர்களுக்குக் கதை சொல்லும்பொழுது பெற்றோர்-குழந்தைகளுக்கு இடையிலான பாசப் பிணைப்பு அதிகரிக்கும். இது குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தபோது தாத்தா, பாட்டிகளிடம் கதை கேட்கும் பாக்கியம் பெரும்பாலான குழந்தைகளுக்கு வாய்த்தது. கூட்டுக் குடும்பமே கனவாகிப்போன இன்றைய நாளில் தாத்தா, பாட்டிகளோ முதியோர் இல்லத்தில். கதைகளோ காணாமல் போய்விட்டன.

அடிக்கடி முருங்கை மரம் ஏறும் விலைவாசி வேதாளத்தைக் கட்டுப்படுத்த விக்ரமாதித்தர்களாக மாறி நாள் முழுதும் உழைக்க வேண்டியிருப்பதால் பெரும்பாலான பெற்றோருக்குத் தங்கள் குழந்தைகளிடம் அன்பாகப் பேசக்கூட முடிவதில்லை.

அப்படியிருக்கையில் அவர்களுக்குக் கதைகூற நேரம் எங்கிருந்து கிடைக்கும்? இதனால் குழந்தைகளுக்குத் தனிமையே துணையாகி விடுகிறது.

பல இடங்களில் தந்தை, தாயின் அன்பையும், அரவணைப்பையும்கூட குழந்தைகள் தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஊட்டச்சத்து பான விளம்பரங்களில் வரும் பெற்றோரிடமே தேட வேண்டிய நிலை உள்ளது.
கதை சொல்ல ஆளில்லாததால் குழந்தைகளுக்கு கதைப் பஞ்சம் ஏற்படுகிறது. விக்ரமாதித்தர்களும் வேதாளமும், பஞ்ச தந்திரக் கதைகளும் இன்று குழந்தைகளுக்கு எட்டாக் கனியாகவே உள்ளன.

பிஞ்சுகள் நெஞ்சங்களில் விதைக்கப்படும் அறிவார்ந்த, ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் கதைகள் நாள்பட முளைத்து தக்க நேரத்தில் உரிய பலன்களை ஒன்றுக்குப் பத்தாகத் தரும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

"காலை எழுந்தவுடன் படிப்பு, மாலை முழுதும் விளையாட்டு' என்பதுடன் இரவில் உறங்கச் செல்லும் முன் அன்பு உள்ளிட்ட அனைத்து நற்பண்புகளையும் வலியுறுத்தும் கதைகளும் அவசியம் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

விதவிதமான உடைகள், வாய்க்கு ருசியான தின்பண்டங்கள் மட்டுமே குழந்தைகளைத் திருப்திப்படுத்துவதில்லை. நல்ல கதைகளும் அவர்களை மிகவும் மகிழ்விக்கும். குழந்தைகளின் மனங்களை அதிக அன்பினால் மட்டுமல்ல, ஆயுதத்தாலும் வெல்லலாம். அந்த ஆயுதம் "கதா"யுதம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிந்தனைப் பூக்கள்'
பத்மநாதன் பார்வையில்

# இனிமையும் இளமையும் நிரம்பிய இருபதாவது ஆண்டுமலர்

இருபது வருடங்களுக்கு முன்னால் கனடிய வீதிகளில் இளைஞர் பரம்பரையொன்று நடந்து செல்வதனையும், சிலர் கைப்பைகளுக்குள் படக் கொப்பிகளை நிரப்பிக் கொண்டு வேகமாக நடந்து செல்வதனையும், சாரிசாரியாக மல்யுத்தக் காட்சிகளுக்காக அலைந்து திரிவதனையும் கண்டு பல்வேறு வகையான சிந்தனைகள் எனக்குள் எழும். இவ்வளவு தூரம் புலம்பெயர்ந்து வந்து தொழிற்சாலைகளில் வேலை செய்து, படம் பார்த்துக் கொண்டு சிலவேளைகளில் மதுவிலும் சரணடைந்து வாழ்ந்து முடிப்பார்களோ என்ற பயம் எனக்குள் தோன்றும். கால நகர்வில் அந்த வீதிக்காட்சியும் மாறத் தொடங்கி விட்டது.

புதிய புதிய வீதிகளில் குடும்பங்கள் நகர்ந்து சென்றன; சொந்த வாகனங்களில் எம்மவர்கள் பிரயாணம் செய்தார்கள். படிப்படியாக பலசரக்குக் கடைகள் ஆங்காங்கே தோன்றின. குயிபெக் நகரை விட்டு ரொறன்ரோவுக்குத் தமிழர்கள் இடம் மாறினார், வயோதிபர்கள் வந்து இறங்கினர்; முற்றுமுழுவதும் மாறுதலான முகப்புத் தோற்றம் ரொறன்ரோவுக்கு ஏற்பட்டது. எனினும், மக்களை வளர்த்துச் செல்லும் அறிவியல் பணி மிகவும் குறைவாகவே இருந்தது. பத்திரிகை படிப்பது, நூல் வாசிப்பது, நாட்டு விபரங்களைப் பற்றி உரையாடுவது மிகவும் குறைவாகவே இருந்தது.




இந்தச் சூழ்நிலையில் 'தமிழர் தகவல்' சஞ்சிகை 1991 பெப்ரவரியில் இந்த மண்ணில் வேரூன்றியது. 40,000 தமிழ் மக்கள் வாழ்ந்த வேளையில் ஈழத்தமிழர் தகவல் நிலையம், கத்தோலிக்க குடிவரவு நிலையம் என்பன ஒன்றிணைந்து 'தமிழர் தகவல்ஆய்வுப் பிரிவு (THIRU)' மூலம் இச்சஞ்சிகை வெளிவர தொடங்கியது. முதல் வெளிவந்த தமிழர் தகவல் 16 பக்கங்களைக் கொண்டது, 1000 பிரதிகள் மட்டுமே அச்சாகியது. 1992 பெப்ரவரியில் முதலாவது ஆண்டுமலர் வெளியானதும் "அகிலன் அசோஷியேற்ஸ்" என்ற பெயரில் பிரதம ஆசிரியர் திரு.எஸ்.திருச்செல்வம் அவர்களது முயற்சியால் தமிழர் தகவல் சஞ்சிகை ஒரு பல்துறைசார் ஏடாக மாறியது.

'வாழும் போதே கலைஞர்களை கௌரவிக்கும்' உயர் லட்சியத்துடன் சமூக வாழ்வுடன் இந்நிறுவனம் இணைந்து கொண்டது. ஏனைய இனத்தினரையும் இளைஞர்களையும் அரவணைத்துக் கொண்டு ஆலமரமாக வளர்ந்தது. இதன் பின்னரே 'தகவல் நெடுஞ்சாலை' உருவாகியது; தொடர்ச்சியான ஒட்டகப் பயணம் நிகழ்ந்தது; சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி மட்டுமல்ல சுவடுகளை ஆழமாகவும் நேர்த்தியாகவும் பதிக்கத் தொடங்கியது. இந்த வரலாற்று நிகழ்வில் இரு தசாப்தம் கடந்து இருபதாவது ஆண்டுமலரையும் வெளியிட்டு பெருமை கொண்டுள்ளது.

கனடாவில் உள்ள தமிழர்களையும் உலகிலுள்ள தமிழ்அறிஞர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள இந்த மலர் தமிழர்களுக்கு முக்கிய ஆவணமாக திகழப் போகின்றது. 'எஸ்தி' என்ற இரண்டு எழுத்துக்குள் மறைந்து நிற்கும் இந்த எழுத்துலக சிற்பியின் துணிச்சல் மிக்க சாதனைகளே ஆண்டுமலர் வெளியீடும், கௌரவிப்பு வைபவமும் ஆகும். "துணிச்சல், வீரம், நெஞ்சழுத்தம், நிலைதழும்பாமை, கொண்ட கொள்கை மீதான அசைக்க முடியாத நம்பிக்கைகளையே பேனாவின் மையாக நிரப்பி வைத்திருக்கின்றீர்கள்" என்ற வரிகள் 'எஸ்தி'க்காக புலவர் பார்வதிநாதசிவம் எழுதியவை. அத்தனையும் மலரினை பார்க்க புகும்வேளை எம்மையும் வியக்க வைக்கும்.

இந்த மலரின் அடிப்படை வடிவம் எப்போதும் போல் மனதில் பதிந்து விடக்கூடியது. வருடம் தோறும் புதுமை சேர்க்கும் அட்டை அமைப்பு இவ்வருடத்திற்கும் பொருந்தும். அழகான நிறப் பின்னணியில் ஒன்பது விருதாளர்களின் புன்னகைப் படங்கள்அழகாக இணைவு பெற்றுள்ளன. இளமை ததும்பும் முகங்களும், நடுத்தர வயது முகங்களும், முதுமை முகங்களும் ஒன்று கூடி சமூகத்துடன் இணைந்த வளர்ச்சியை காட்டி நிற்கின்றன. உள்ளே ஆ, ஆ, இ, ஈ என்ற தமிழ் எழுத்துக்களை மேற்பதித்து உள்ளே சுவடுகள் பதிவாகியுள்ளன. என்றும் போல் அ, ஆ எஸ்திக்குரிய பக்கம். முதன்மை ஆசிரியரின் கூர்மையான வரிகளுக்குள் அனைத்தும் அடக்கம். எந்த ஒரு மாயவலைக்கும் சிக்காது இருநூற்றிநாற்பது மாதங்களாக தமிழர் தகவல் வெளிவருவது பற்றிக் குறிப்பிட்ட அவர் அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் தமிழ்த்தேசியத்தை வளர்க்க இச்சஞ்சிகை உதவுகிறது என்கிறார். 'அ' பக்கத்தில் ஆசிரியர் குழுவின் படங்களும் பதிவு செய்யப்பட்டன.

இறுதிப் பகுதியில் 12 தொண்டர்களின் படங்களையும் பதிவு செய்து அழகு சேர்த்துள்ளார். 'இ' பக்கத்தில் தமிழர் தகவலின் மூலமாகவும் ஆணிவேராகவும் திகழ்ந்த திரு. நா.சிவலிங்கம் அவர்களது மறைவு குறித்து அவருக்கே இம் மலரை சமர்ப்பணமாக்கி உள்ளார் ஆசிரியர். அதற்கு கீழ் இம் மலரில் இடம்பெறும் 76 எழுத்தாளர்களது பெயர்களையும் கட்டுரைப் பக்கங்களையும் எத்தனையோ நிறங்களில் பதிந்திருப்பது மிகவும் புதுமையான முயற்சியே. இதன் அழகு சொல்ல முடியாததொன்று. 'ஈ' பக்கத்தில் தமிழர் தகவல் ஆரம்பித்து வளர்ச்சி பெற்றதினை மிகவும் சுருக்கமான; பொருத்தமான வசன அமைப்புகளில் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை இடம்பெற்றுள்ளது.

இம்மலர் ஒரு வரலாற்று நிகழ்வு. வெற்றிகரமான பிரயாணம், தகவல் பெற்றுள்ள பல்வேறு விருதுகள் பற்றியதுடன் முதன்மை ஆசிரியர் எஸ்.திருச்செல்வம் 40 வருடங்களாக பத்திரிகைத் துறையில் பெற்ற பாராட்டுகள், விருதுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளமை பொருத்தமானதொன்றாகும். தொடர்ந்து கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

76 பிரபல எழுத்தாளர்கள் இம்மலரில் தங்களின் நுண்ணியபார்வைகளுடன் கட்டுரைகளை வரைந்துள்ளனர். எல்லாக் கட்டுரைகளையும் வாசித்து வாசித்து எண்ணச்சிறகுகளை விரிக்க முடியுமே தவிர சுலபமாக எழுத்தில் வடிக்க முடியாததொன்றாகும். அதனால் தான் என்னவோ ஒவ்வொரு கட்டுரைகளின் ஆரம்பத்தில் எழுத்தாளரின் படத்தினையும், அருகில் சில (32 ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா திருமறைக் கலாமன்ற 'முள் முடி' பேயசுவின் திருப்பாடுகள்

கனடா திருமறைக் கலாமன்றத்தின் 'முள் முடி' பேயசுவின் திருப்பாடுகள் நாடகம் கடந்த மாதம் 16ஆம் திகதி ரொறன்ரோவில் மேடையேற்றப்பட்டது.













# A MONTH SYMBOLIZING WAR CRIMES AND

*"Our lives begin to end the day we become silent about things that matter"* -Martin Luther King, Jr

In every corner of this globe, the lives of Tamils bear resemblance to a dark stained mirror. We are enduring blood stained lives. Our lives have been engraved upon pain, blood, lies, misery, betrayal, and unforgettable deaths. The voices of our people in Eelam have been silenced by brutal actions and terrorizing behaviour of the Sri Lankan Government. After the conduction of a well planned and systematic ethnic cleansing of the Tamils, the Sri Lankan Government is executing a silent genocide against the innocent Tamil civilians till this very moment. Burden after burden, sorrows on top of sorrows, however, all this misery has ignited a deadly fire within every Tamil being, a wild fire which will burn with full pride and craze to save our race from denial and extermination.

The month of May, said to be the appellation of the Greek Goddess of Fertility, Maia, depicts a time of growth, sustainability and prosperity. Fertility is the property of producing abundantly and sustaining vigorous growth. This month should assist the growth of life in all possible ways. In contrast, May, a month which brings along with it a bundle of joy and excitement, delivered a large bundle of chaos, pain, darkness, and great losses for the Tamils around the world and in Eelam. The month of May brought grotesque devastations and many changes to the fate and future of the people of Tamil Eelam. This month has been deemed to be one the darkest and sorrowful times in the history of the Tamils' struggle for justice and freedom. This month has been marked as the height of the genocidal onslaught committed by the Government of Sri Lanka against the Tamil minority. Tens of thousands of innocent civilians were brutally massacred within a short span of time. As well as, more than 300, 000 were internally displaced while being deprived of fundamental human rights, basic needs, and medical attention. During this time period many civilians were also inhumanly raped, tortured, and killed silently.



Anojini Kur
2nd year student,

## IN REME
## MAY MA

Did these ferocious actions against humanity halt over the course of two years?

No, I haven't even dreamt of the existence of peace in the island of Sri Lanka. Till this very moment thousands of people are languishing in open, inadequately managed, poorly fed, military guarded, over populated concentration camps. The presence of military occupation within the range of civilian areas, schools, hospitals and homes has created a great sense of fear amongst the Tamil population. While displaced families have not been allowed to resettle in their villages and houses the government has been successful in executing the scheme of Sinhalese colonization onto the lands of Tamils, as well as building naval and army camps along the coasts of such areas. Till this very moment, abductions, rapes, and killings



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## D DEVASTATION IN THE TEAR DROP ISLAND

continue to intensify within the Tamil populated regions of Sri Lanka.

As the intensification of the Sri Lankan government's intent to exterminate, displace, and reject civil liberties and rights of the Eezham Tamils increased, it also went side by side with the international communities' silence and failure to instill peace and justice. These outcomes resulted in the loss of trust and hope the Tamil Diaspora had once instilled in international bodies, authorities, humanitarian organizations, the United Nation Organization, and most importantly the existence and proper execution of international law, The Geneva Conventions, and The Universal Declaration of Human Rights.

By what term shall we address these atrocities and violating actions employed by the Sri Lankan government and authorities to wipe out the Tamil race? According to the United Nations, actions performed against the rules of war during a course of rivalry which violates international laws and conventions, is considered to be a war crime. It can range from the conduction of genocide to mass murder to ill treatment of war prisoners to the ignorance and defiance of international human rights law and the Geneva Conventions. Under international humanitarian law, civilians can never be made objects of a military attack. Many countries, including countries signatory to the Geneva Conventions, (a set of four treatises setting rules of international humanitarian law in respect to the humane treatment of victims of war), violated the terms of international humanitarian law by allowing genocide to dominate in the island of Sri Lanka.

umaradasan
nt, York University

## EMBRANCE OF THE ASSACRE

However, we as Tamils, continued to accumulate pressure on international organizations and countries to, firstly hold Sri Lankan authorities accountable for their inhumane treatment of civilians and prisoners of war (our heroes) and the alleged ethnic cleansing of Tamils, to conduct an international and independent war crimes inquiry in Sri Lanka, to play a role in the procedure or reestablishing the lives, and to be a positive catalyst in deriving at a permanent political solution for the Eezham Tamils. Even though the world remained silent to our cries, with a sense of distrust in our hearts we held on tight to our perseverance and continuously urged the international community to stand in favor of justice. Due to intense pressure of the Tamil community against international bodies to investigate the crimes committed against humanity, many organizations and countries evolved to raise their voices against the injustices Tamils have been and continue to endure till this day. A variety of organizations and international media stations, such as Amnesty International, Human Rights Watch, United Nations (specifically the UN Panel of Experts on Accountability in Sri Lanka), Channel 4 and many more published raw evidences of the genocidal crimes committed by the Sri Lankan government against the Eezham Tamil populace. (Contd. on page 30)

## முதுதமிழர் மன்றத்தின் வெள்ளி விழா வைபவம்

ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் 25 ஆண்டுகள் பூர்த்திக்கான வெள்ளி விழா கடந்த மாதம் 9ஆம் திகதி ஸ்காபரோவில் நடைபெற்றது. ஒன்ராறியோ அமைச்சர் டாக்டர் ஹொஸ்கின்ஸ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சமய, நடன, மிருதங்க, இசை தொடர்பான புறோமாரின் சொந்தத் தயாரிப்புகள் யூன் 6ம் திகதிமுதல் விற்பனைக்கு வருவதால் அவற்றின் கொள்வனவாளர்கள் இந்த விளம்பரத்துடன்மேலதிக விலைக் கழிவையும் பெற்றுக்கொள்ளலாம்

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..



2010முதல் அதிகமான பொருட்கள்
எங்களின் சொந்த தயாரிப்பு என்பதால் இந்த
பொருட்களோ, விலையோ வேறு **எங்கும்** கிடைக்காது.

On high, with your thoughts

**PRO MAR**
**Awards & Promotions Ltd**

**www.promarawards.com 416-291 2344**

***585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5***

A B

## AB LEGAL SERVICES
Professional Corporation

## Kauvsegan.E
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

46

கேட்ட வரமளிக்கும்
கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடே எங்கே குடிபோனீர்?

மாற்றுத் திறனாளிகள் கூட உலகை மாற்றியமைக்க முடியும் என்பதைக் காட்டவும் அவர்களை ஊக்கப்படுத்தவும் ஆண்டுதோறும் மார்கழி 3 ஆம் நாளை மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய நாளாக உலகம் கொண்டாடுகிறது.

ஆயிரத்துக்கும் அதிகமான அரிய கண்டுபிடிப்புகளைச் செய்த தொமாஸ் அல்வா எடிசனுக்கும் இசைக் கலையில் பெரும் சாதனைகள் செய்த பீத்தோவனுக்கும் காது கேட்காது. இது போன்று பலர் அரிய சாதனைகள் செய்திருக்கின்றனர்.

மாற்றுத் திறனாளிகளாக விளங்கிய இரட்டைப் புலவர்களும் தங்கள் பாட்டுத்திறனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்கள். இன்னொரு புலவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

இரட்டைப் புலவர்கள் இருவருக்கும் நகைச்சுவை மிக அதிகம். இவர்களின் வெண்பா மிக எளிமையாக அமைந்திருக்கும். அகரமுதலி துணை இல்லாமலே பாடலின் பொருளைப் புரிந்து கொள்ளலாம்.
வெண்பா என்பது நான்கு அடிப்பாடல் என்பது பலரும் அறிந்ததே. முதல் மூன்றடிகள் நான்கு சீர்களும் நான்காம் அடி மூன்று சீர்களும் உடையதாக இருக்கும். நேரிசை வெண்பா என்றால் இரண்டாம் அடியின் மூன்றாம் சீருக்கும் நான்காம் சீருக்கும் இடையில் சிறு கோடு இருக்கும். அவ்வாறு வரும் அந்த நான்காம் சீரைத் தனிச்சீர் என்பார்கள்.

இரட்டைப் புலவர்கள் ஏதாவது ஒரு பொருளைப் பற்றியோ, ஆளைப் பற்றியோ, காட்சியைப் பற்றியோ, நிகழ்ச்சியைப் பற்றியோ அவர்களுக்கே உரிய நகைச்சுவையோடு பாடுவார்கள்.
முன்னர் கூறியது போல இருவருள் ஒருவர் முதலில் வெண்பாவின் முதல் ஏழுசீர் அல்லது எட்டுச்சீர் கொண்ட முதல் இரண்டடிகளைப் பாடுவார். பெரும்பாலும் அந்த இரண்டடிகளும் கேள்வி கேட்பது போலவோ அய்யமாக வினவுவது போலவோ இருக்கும்.

தொடர்ந்து இரண்டாமவர் அடுத்த எட்டு அல்லது ஏழுசீர் கொண்ட எஞ்சிய இரண்டடிகளைப் பாடுவார். இரண்டாவதாகப் பாடுகின்றவர், முதலில் பாடியவரின் கேள்விக்கு விடையளிக்கும் வகையிலோ அல்லது அவர் எழுப்பிய அய்யத்திற்கு விளக்கம் அளிக்கும் வகையிலோ கருத்தமைத்துப் பாடுவார்.

ஒருமுறை இரட்டைப் புலவர்கள், ஈழத்தில் நிகழ்ந்தது போன்ற ஏதோ பெரும் பேரழிவையோ கொடிய பஞ்சத்தையோ அறிந்திருக்கிறார்கள். மனம் ஆறாத நிலையில் அவர்கள் அப்போதிருந்த உணர்வுநிலையில் தெய்வங்களை நோக்கிக் கேள்வி கேட்பது போலவும் அதற்குத் தெய்வங்கள் விடையளிப்பது போலவும் பாடிய ஒரு அறிவு நயம் படைத்த பாடலை இப்போது பார்ப்போம். முதலில் முதுசூரியர் பாடிய இரண்டடிகள்.
"கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடே எங்கே குடிபோனீர்?"
இந்த இரண்டு அடிகளின் பொருள் நமக்கு எளிதில் புரிகிறது. கீர்த்தி என்றால் மிகுந்த புகழ். "மிகுந்த புகழை உடைய கேட்ட வரத்தை அளிக்கும் ஆற்றல் மிக்க தெய்வங்களே! இங்கிருந்து நீங்கி எல்லோருமாக எங்கே போய்க் குடியேறி விட்டீர்கள்?" என்று கேள்வி எழுப்புகிறார்.
இதற்கு விடையளிக்கும் வகையில் இளஞ்சூரியர் பின்வருமாறு பாடினார்.
......................................பாட்டாய்க்கேள்!
செல்கால மெல்லாம் செலுத்தினோம் அல்காலம்
கல்லானோம் செம்பானோம் காண்.

இந்த அடிகளின் பொருளைப் புரிந்து கொள்வதும் எளிதே!
"பாடுகின்றவனே! உன் கேள்விக்கு விடை கூறுகிறேன் கேட்டுக்கொள்! எங்கள் ஆற்றல் செல்லுபடியாகின்ற காலமெல்லாம் ஆளுமையை அதிகாரத்தைச் செலுத்தினோம்! இப்போது இருளான கெட்டகாலம் எங்கள் ஆற்றலெல்லாம் இழந்து கல்லாலும் செம்பாலும் செய்த சிலைகளாகி விட்டதைப் பார்த்திடுக!" என்று தெய்வங்களை நொந்து பாடிய முதுசூரியருக்கு விடையளிப்பதாகக் கருத்தமைத்து இளஞ்சூரியர் பாடிவிட்டார்.

முழுப் பாடலையும் இப்போது பார்ப்போம்.
கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடே எங்கே குடிபோனீர்? - பாட்டாய்க்கேள்!
செல்கால மெல்லாம் செலுத்தினோம் அல்காலம்
கல்லானோம் செம்பானோம் காண்.

இரட்டைப் புலவர்களின் பாடலில் எழுப்பிய வினா போன்று முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய பாரிய அழிவுக்குப் பின் மக்கள் தெய்வங்களை நோக்கி இதே வினாவை எழுப்பினார்கள். ஆனால் விடை கிடைக்கவில்லை.

இவர்கள் பாடிய தில்லைக் கலம்பகப் பாடல் ஒன்றில், இரண்டு (2) தொடர்ந்து வருவது போல் பாடுகின்றனர்.
காதில் இரண்டு பேர் கண்டோர் இரண்டு பேர்
ஏதிலராய்க் காணோர் இரண்டு பேர் பேதை முலை
உண்ணார் இரண்டு பேர் ஓங்கு புலியூரருக்குப்
பெண்ணான பேர் இரண்டு பேர்!

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக அம்சமாகப் பிறந்த இரண்டு பேர், கலைமகள் அருளால் அருமையான இசைஞானத்தைப் பெற்றார்கள். இவர்கள் இருவரும் தங்களின் இசை வல்லமையை சிவபெருமானிடம் மட்டுமே அளிக்கத் தவமிருந்தார்கள்.

தவத்திற்கு மெச்சிய சிவபெருமான், அவர்களின் வேண்டுதலின் படி அவர்கள் இருவரையும் தன்னுடைய காதுத் தோடுகளாக அணிந்து கொண்டார். அந்த நாகர்கள் இரண்டு பேர் கம்பளர் மற்றும் அசுவதரர்.

இந்த இருவரையும் தான், இரட்டைப் புலவர்கள் ‘காதில் இரண்டு பேர்’ என்கின்றனர்.
‘கண்டோர் இரண்டு பேர்’ – தில்லைச் சிதம்பரத்தில் ஆடல்நாயகனின் தாண்டவத்தைக் கண்டு பேறு பெற்றவர்கள் இரண்டு பேர். அவர்கள் பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர்கள்.

‘ஏதிலராய்க் காணோர் இரண்டு பேர்’ – அடிமுடி தெரியாவண்ணம் ஒளி வடிவாக நின்ற சிவபெருமானை - பிரம்மாவும் விஷ்ணுவும் தலை எங்கு, கால் எங்கு என்று தெரியாமல் திகைத்தனர். ஆகையாலேயே பிரம்மாவும், விஷ்ணுவும் ‘காணோர் இரண்டு பேர்’.
‘பேதை முலை உண்ணார் இரண்டு பேர்’ – பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவது மரபு. ஆனாலும், குழந்தையாய் இருந்தாலும் தாய்ப்பால் உண்ணாதவர்கள் இரண்டு பேர். ஒருவர் பார்வதி தேவிக்கு மகனாய்ப் பிறந்த மூத்த பிள்ளையார். மற்றொருவர் பார்வதி தேவியால் ஞானப்பால் அருளப்பெற்ற திருஞானசம்பந்தர் (இளைய பிள்ளையார்).

‘ஓங்கு புலியூரருக்கு பெண்ணான பேர் இரண்டு பேர்’ – சிவபெருமான் கங்கை மற்றும் உமாதேவி இருவரையும் பெண்டாளுவதைக் (மனைவியாக்கிக் கொண்டதை) இரட்டைப் புலவர்கள் குறிக்கின்றனர்.

தில்லை நடராசர் தூக்கிய திருவடி குஞ்சிதபாதம் என்று அழைக்கப்படும். அந்தக் குஞ்சிதபாத காட்சியே வீடுபேற்றைத் தரவல்லது. அந்தக் காலடிகளைப் பாடி மகிழ்கின்றனர் இரட்டைப் புலவர்கள்.
(வளரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாஜினி பாலராஜன்

# பெண்ணின் பொழுது 31

**Teabag folding**

இருபதாம் நூற்றாண்டின் கடைக் கூற்றில் ஹோலண்ட் நாட்டில் ஆரம்பிக்கப் பட்டதே Teabag folding என்னும் கலையாகும். இக் கலையானது கிட்டத்தட்ட யப்பானிய மக்களின் ஒரிகாமி போன்றதாகும். இதுவும் ஒரு வகை ஒரிகாமி ஒன்றே சொல்லலாம். ஒரிகாமி பிறந்தது யப்பானியர்களிடமிருந்து தான். ஆனால் இந்த Teabag folding ஒரிகாமியின் அடிப்படைத் தத்துவத்தினை மையமாகக் கொண்டு ஹோலண்ட் நாட்டில் பிறந்த்து.

இக் கலையானது டச்சுப் பெண்மணியான Tiny van der Plas என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதாக சரித்திரம் கூறுகின்றது. அதாவது இப் பெண்மணி ஒருநாள் ஆறுதலாக இருந்து தேநீர் அருந்திக் கொண்டு இருக்கும் போதுதான் அவரது சகோதரியின் பிறந்தநாளுக்காக வாழ்த்து மடல் செய்யவில்லையே என்ற நினைவு ஏற்பட்டதாம். இதனை மனதில் கொண்டு கையில் பாவித்த தேயிலையின் உறையினை வைத்து அதனை மடித்துப் பார்த்தாராம். இந்த சின்ன சதுரமான தேயிலை உறைகளை மடித்து ஒன்றுள் ஒன்று சொருகி அதிலிருந்து ஒரு அழகான முப்பரிமாண வடிவத்தினைப் பெற்றுக் கொண்டாராம். இதனால் தான் இக்கலைக்கு Teabag folding என்ற பெயர் ஏற்பட்டது. இதன் பின்னர் வெவ்வேறு நாடுகளில் புதுமைகள் செய்யப்பட்டு வெவ்வேறு நுணுக்கங்களைப் பாவித்து வித்தியாசமான ஒரு கலையாக வளர ஆரம்பித்து தற்போது மிகவும் முக்கியமான கலையாக வாழ்த்து மடல்களை அலங்கரிப்பதற்குப் பாவிக்கப்பட்டு வருவதுடன் சில இடங்களில் பாடசாலைகளிலும் பயிற்றுவிக்கப் படுகின்றது.

மிகவும் சாதாரணமான Teabag folding kite folding எனப்படும். கீழ் காணும் படத்தில் உள்ளது போல் செய்வதற்கு 9 ஒரே மாதிரியான ஒரே அளவான வட்டங்கள் தேவை.

இந்தப் பூவினைச் செய்வதற்கு எட்டு வட்டங்கள் தான் பாவிக்கப்படும். ஒன்பதாவது வட்டம் இவற்றைச் செய்து ஒட்டுவதற்கான அடிப்புறமாகப் பாவிக்க உதவும்.


முதலில் ஒரு வட்டத் துண்டினை எடுத்து நான்காக மடிக்க வேண்டும். அதாவது விட்டப் பக்கமாக மாறி மாறி மடிக்க வேண்டும். பின்னர் விரித்து அடுத்தடுத்து வரும் கால்பகுதிகளின் (quarter) இன் நுனியினை படம் ஒன்றில் உள்ளது போல மடிக்கவும். பின்னர் படம் இரண்டிலுள்ளதுபோல மறுபக்கமாகத் திருப்பி வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து முதலில் மடித்த அப்பகுதி (நிலத்தினைப் பார்த்தபடி இருக்கும்) மேல்பக்கம் திரும்பும்படி திருப்பி நடுக் கோட்டுடன் பொருந்தும்படி இரண்டையும் மடிக்க வேண்டும். இவ்வாறு மடிக்கும் போது படம் மூன்றில் உள்ளது போல வரும். தொடர்ந்து எட்டு வட்டங்களையும் மடிக்கவும்.

இவ்வாறு எட்டு வட்டங்களை மடித்து வைத்துக் கொள்ளவும். ஒன்பதாவது வட்டத்தினையும் நான்காக மடித்து விட்டுப் பின்னர் விரித்து அதனில் ஒட்டும் பசையினைப் பூசிக் கொள்ளவும். ஒரு கால் வட்டத்தினுள் இரண்டு இதழ்கள் சரியாகப் பொருந்தும்படி ஒன்றுள் ஒன்றாகச் சொருகி எட்டு இதழ்களையும் ஒட்டவும். இடைவெளி இராது கவனமாக ஒட்ட வேண்டும். அப்படி ஒட்டும் போது அழகிய பூ வடிவம் கிடைக்கும். இதற்குப் பாவிக்கும் கடதாசி இரண்டு பக்கமும் வெவ்வேறு நிறமுள்ளதாக இருந்தால் அழகாக இருக்கும். மேலும் நடுப்பகுதிக்கு ஒரு கல்லோ அல்லது முத்தோ ஒட்டிக் கொள்ளலாம். அழகான மலர் ஒன்று கிடைக்கும். இதனைக் கொண்டு வாழ்த்து மடல்களை அலங்கரித்துக் கொள்ளலாம்










ஒரு குடையின் கீழ் சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்

**S.P. Importers**





**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

## RAINBOW VILLAGE DENTAL OFFICE

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

## Main Square Dental Office

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**

## Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Est. 1991
**www.computek.edu**

*If you are :*

- Currently receving E.I benefits
- Received E.I within past 3 yrs.
- Just finished / received maternity benefits within past 5 yrs

*You may be eligible for HRSDC funding to upgrade your skills*

**NEW LOCATION**
IN
**MARKHAM !**

**Diploma**
Early Childcare Assistant
Network Engineering
Personal Support Worker (PSW )
Computerized Accounting
Business Administration
Medical Office Admin (MOA)

Certificate
MS Office, A+, C/C++ , Java
AccPac, Quick Books
Simply Accounting

**Markham Campus**
**Markham / Steeles**
**(On Steeles,1 Block East of Markham Rd)**
**905.471.3344**

**Scaborough Campus**
**Kennedy / Sheppard**
**(North-East Corner)**
**416-321-9911**

**Toronto Campus**
**Kennedy / Eglinton**
**N/W Corner, Above Library**
**426.285.9941**

**PLEASE NOTE THAT NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Panel of experts...

Mr. Ban has decided that he will respond positively to the panel's recommendation for a review of the UN's actions regarding the implementation of its humanitarian and protection mandates during the war in Sri Lanka – particularly in the last stages – and its aftermath. The modality of such a review will be determined after consultations with relevant agencies, funds and programmes.

The three-member panel of experts was set up following the Joint Statement made by Mr. Ban and Sri Lankan President Mahinda Rajapaksa after the Secretary-General visited the South Asian nation shortly after the end of the conflict.

The members of the panel were Marzuki Darusman of Indonesia (chair), Yasmin Sooka of South Africa and Steven Ratner of the United States. They began their work in September 2010. (AFP)

## Ban Ki Moon...

A statement attributed to the U.N. spokesperson said: "The decision to release the report was made as a matter of transparency and in the broader public interest."

A copy of the report was shared with the Sri Lankan government, through its Permanent Mission to the United Nations, on Apr. 12.

Although Ban indicated his willingness to publicise the government's response alongside the report, Sri Lanka did not avail itself of this opportunity.

"The government has not responded to this offer which nonetheless still stands," U.N. spokesperson Martin Nesirky said Monday.

One of the first recommendations of the panel was to call on the Sri Lankan government to respond to the "serious allegations" of war crimes "by initiating an effective accountability process beginning with genuine investigations." (IPS)



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

## மனமே! நலமா?

13

காலையில் எழுந்து தலைசீவும்போது கண்ணாடியில் பாரத்துக் கொள்ளும் முகம் மட்டும் 'நாம்' அல்ல. புகைப்படக் கருவியினால் எடுக்கப்படும் நிழற்படமும் 'நாம்' அல்ல. உள்ளிருக்கும் மனமே நாம். அந்த மனத்தின் செயற்பாடுகள், வெளிப்பாடுகள், குறைகள், நிறைகள், கோணல்கள், வசீகரங்கள், வக்கிரங்கள் - இவற்றின் மொத்த வடிவமே நாம்.

மனதின் சக்திக்கு எல்லை இல்லை. தூசி படும் போது இமை மூடுவது போலவே, பிரச்சனை வரும் போது மனம் சில விதங்களில் செயல்படுகிறது. அதாவது தற்காப்பு இயக்கம் செயற்பட ஆரம்பிக்கின்றது. சில இறுக்கமான கட்டங்களில் மனம் பல்வேறு விதமான மனோ தற்காப்பு முறைகளை (Defence Mechanisms) தெரிந்து கொள்கிறது. உண்மையில் இந்த இயக்கங்கள் அவசியமானவை. அவை எதுவுமே பொய்யாகவோ, நடிப்பாகவோ உருவாகுவதில்லை. கண்ணை இமை மூடிக் காப்பது போல் மனதைக் காயப்படுத்தாமல் பாதுகாக்கின்றன. எங்களைப் போலவே மற்றவர்கள் மனதும் தொழிற்படுகிறது என்பதை புரிந்து கொண்டால் நாம் கோபப்படவே யாரும் இருக்க மாட்டார்கள். ஒரு பிரமாண்டமான சூழல் நமக்கெதிராக ஏற்பட்டாலும் அதனை மாற்ற நம்மால் முடிகிறது!

மனம் மிகவும் ஆழமானது மட்டுமல்ல, அழகானதும் புத்திசாலித்தனமானதும் கூட. அதனால் தான் அது தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள ஓர் இயக்கத்தை உள்ளமைத்துக் கொண்டுள்ளது. மனதின் தற்காப்பு முறைகளில் ஒருவகை தியாக உணர்வு (Sublimation) என்பதாகும். தோல்வியை சமாளிக்க கவிதை எழுதுவது, இசையில் ஈடுபடுவது, வியாபாரத்தில் முனைவது, விளையாட்டுக்களில் ஈடுபடுவது போன்ற நிகழ்வுகளில் ஈடுபடுவர்.

மனதின் தற்காப்பு முறைகளில் இன்னொருவகை தோல்வியை மறைக்க அல்லது குறையை மறைக்க முயலும் முறை, இதனை திறமை இருந்தும் ஒரு குறை இருந்தால் இவ்வகையான ஈடு செய்யும் (Compensation) முறை பலரிடம் உள்ளது. படிப்பில் சுமாராக உள்ள ஒருவர் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு பதக்கங்களை குவிக்கும் போது மனம் ஒரு தற்காப்பு எடுத்துக் கொள்கிறது. நமது பாதையில் பல குறுக்கு சுவர்கள் வரலாம். சோர்ந்து உட்கார்ந்து விடுவதும், தாண்டி அடுத்த பக்கம் குதிப்பதும் மனத்தால் முடியும். எதற்குப் பழக்கப்படுகிறதோ அதையே மனம் பக்குவமாய் தன்னிச்சையாய், பிரமாதமாய்ச் செய்யும்.

மனம் ஒரு கூர்மையான ஆயுதத்தைப் போன்றது. சரியாகப் பயன்படுத்தாமல் இருந்தால் எம்மையும் மற்றவரையும் புண்படுத்தக் கூடும். எங்கள் முக்கியமான பலமே மனம் தான். அதன் மகத்தான சக்தியை அறிந்து கொண்டால் ஆகாயம் கூட அருகிருக்கும். எங்கு பார்த்தாலும் அழுத்தம், பதட்டம், வேகம், அவசரத் தளர்வு, தயக்கம், துடிப்பு, போராட்டம், போட்டி, சலிப்பு, ஆரவாரம், அலைச்சல் என்பது தான் பொதுவான நிகழ்வுகள். இவற்றை சரியாக புரிந்து கொண்டால், தாக்கங்களை புரிந்து கொண்டால், மனம் நம் வசம். வாழ்வு முழுவதும் வசந்தம் வீசும்.

நம் கற்பனைகள் எவ்வளவு உயரத்தில் பறந்தாலும், அவை தர்க்கம் அல்லது கட்டுப்பாட்டின் எல்லைக்குள் ஓய்வெடுக்கும். இருந்தாலும் மனமும் அறிவுத் திறனும் தொடர்ந்து செயற்பட்டு சரியான முடிவெடுக்கும்; அற்புதமான வேலைகள் செய்து எங்களை ஆச்சரியப்படுத்தும்.

எங்கள் மனதினை மகிழ்ச்சியால் நிரப்புவோம்.

மீண்டும் சந்திப்போம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

## இது எப்பிடி இருக்கு...

இன்று ஈழ மக்களைக் கை கழுவியது, அமர்ந்திருக்கும் முதல்வர் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக!

சிங்களப் படை ஈழத்தில் இழைத்த மனித உரிமை மீறல்களைக் கண்டித்து சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்குக்கூட முன்வராத முதல்வர், தன்னை விமர்சித்த இளங்கோவனையும், காடு வெட்டி குருவையும் கண்டித்துத் தீர்மானம் தீட்டுவதற்குக் கழகத்தின் உயர்மட்டக் குழுவைக் கூட்டியவர். அதே உயர்மட்டக் குழுவில் ராஜபக்ஷேவைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றத் துணிவற்றவர் கலைஞர். ஈழம் குறித்துக் கலைஞர் கண்ணீர் விடுவதும், ஜெயலலிதாவின் ஈழ உணர்வு குறித்து ஆய்வு நடத்துவதும், கலைஞரின் வழக்கமான 'ஆதாய அரசியல் நாடகம்' அல்லாமல் வேறு என்ன?

தியாகத் திருவிளக்கு, சொக்கத் தங்கம் சோனியா காந்தியின் தயவுக்காகத் தவம் இருப்பது ஒரு பக்கம்... 'மத்திய அரசு ஐ.நா-வின் மூவர் குழு அறிக்கை அதிகாரப்பூர்வமாக வெளிவந்ததும் கால தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பணிவோடு விண்ணப்பம் தருவது மறு பக்கம்... இதுதான் நம் கலைஞரின் இன்றைய 'இரு' பக்கம்!

'கனைக்கும் உரிமைகூட மாநிலக் குதிரைகளுக்கு டெல்லிப் பேரரசின் லாயத்தில் கிடையாது' (கலைஞர் கடிதம் 3.12.1973) என்று 37 ஆண்டுகளுக்கு முன்பே அறிந்துகொண்டவர் நம் முதல்வர். ஆனால், மேடைகளில் மட்டும் அவருக்குப் பாரதிதாசன் எழுதி அனுப்பிவைத்த 'கிளம்பிற்றுக்காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம் - கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை' என்று மறவாமல் முழங்குவார்.

'கூட்டாட்சியும், மாநிலச் சுயாட்சியும் பிரிக்க முடியாதவை. சுயாட்சி இல்லாமல், கூட்டாட்சி இருக்கவே முடியாது' என்று உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுப்பாராவ் சொன்னதை (கலைஞர் கடிதம் 23.6.74) உடன்பிறப்புக்கு உணர்த்தியவர், 'ஈழத் தமிழருக்குக் கொஞ்சம் போட்டுக் கொடுங்கள்' என்ற பாணியில் மத்திய அரசிடம் மனுப் போடுகிறார். 'கொட்டும் மழையைச் சுட்டுப் பொசுக்குகிறேன் பார் என்று கொள்ளிக் கட்டையை எடுத்து நீட்டினால் கட்டைதான் அணையுமே தவிர, மழையா நின்றுவிடும்?' (கலைஞர் கடிதம் 6-10-74) என்று எள்ளல் சுவையோடு கேள்வி கேட்ட நம் கலைஞர், இன்று ஈழம் காண எந்தக் கட்டையைக் கையில் எடுத்திருக்கிறார்?!

ஈழத்தை வைத்து இங்கே கலைஞரும் ஜெயலலிதாவும் தொடர்ந்து செய்து வருவது கடைந்தெடுத்த ஆதாய அரசியல்! போகட்டும், நம் இனவுணர்வாளர்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்? வழக்கம்போல் வைகோவும் நெடுமாறனும் ஒரு பக்கம் கூடுவார்கள். வீரமணி வேறு ஒரு நாள் வீதியில் குரல் கொடுப்பார். சீமான் தனியாக மேடை போட்டு சீற்றவுரை ஆற்றுவார். தமிழினத்தின் நலிவு நீங்கக் குரல் கொடுக்கும்போதும் கூடி நிற்க முடியாதவர்கள், எதற்காகத் தமிழினத்தின் பேரால், தமிழின் பேரால் ஆளுக்கு ஓர் அரசியல் கடை திறக்க வேண்டும்? தமிழ்நாட்டில் இனி யாரும் ஈழத் தமிழர் குறித்துப் பேசாதிருப்பதே... அவர்களுக்குச் செய்யும் பெருந்தொண்டு!

'மனித குலத்தின் மிகப் பெரிய அவலம் சிலரால் இழைக்கப்படும் கொடுமைகள் அன்று; அந்தக் கொடுமைகளை எதிர்க்கத் துணிவின்றி வேடிக்கை பார்க்கும் பலரின் மௌனம்' என்றார் கறுப்பினப் போராளி மார்ட்டின் லூதர் கிங். தமிழ் மண்ணில் நாம் அந்த அவலத்தைத்தான் அரங்கேற்றி வருகிறோம். இனி ஒரு விதி செய்வோம். கட்சி அரசியல் கலக்காமல் ஏழு கோடி மக்களும் நம் இனம் காக்க எழுந்து நின்று போராடுவோம். கலைஞரும், ஜெயலலிதாவும், இனவுணர்வுப் போராளிகளும், ஈழத்துக்காக இணைந்து குரல் கொடுக்க முடியாதெனில், அதுபற்றிப் பேசுவதை அறவே விட்டுவிடுவோம். கொசோவா குடியரசாக முடியும் எனில், இந்தோனேஷியாவின் பிடியில் இருந்து கிழக்கு திமூர் விடுபட இயலும் எனில், 2 சதுர கிலோ மீட்டருக்கும் குறைவான, 35 ஆயிரம் மக்கள் மட்டுமே வாழும் 'மொனகோ' ஒரு தனி நாடாக இயங்குவது சாத்தியம் எனில், ஈழமும் ஒரு நாள் உலக அரங்கில் தனி நாடாய் நிச்சயம் உருவாகும். அதற்கான அடித்தளத்தைப் புலம் பெயர்ந்த தமிழர்களே அமைத்துக்கொள்வார்கள். ஈழத்தின் பெயரால் இங்கே நடப்பது நாற்காலி அரசியல். அதை அவர்கள் நன்றாக அறிவார்கள். ●

- தமிழருவி மணியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதம் கனடாவில் குடித் தொகை சேகரிப்பு; விண்ணப்பப் படிவங்கள் உங்களுக்கு வந்துவிட்டதா?

கனடாவில் ஐந்தாண்டுக்கு ஒரு தடவை நடத்தப்படும் குடிசனத்தொகை கணக்கெடுப்பு இந்த மாதம் நடைபெறுகின்றது. மே மாதம் 2ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் மஞ்சள் நிறத்திலான படிவம் விநியோகிக்கப்படுகின்றது.

இம்முறை ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மட்டுமன்றி, தமிழ் உட்பட வேறு 22 மொழிகளிலும் குடிசனத்தொகை சேகரிப்புப் படிவங்கள் உண்டு. இவைகளை கேட்டுப் பெறமுடியும் ஆங்கிலம் சரியாகத் தெரியாதவர்கள் தமிழ்ப் படிவங்களில் நிரப்புவது வரவேற்கத்தக்கது.

கடந்த காலங்களில் சுருக்கப் படிவம், நீள் படிவம் என்று இரு வகையானவை இதற்குப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இம்முறை ஒரே வகையான படிவமே பயன்படுத்தப்படுகின்றது. முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற ஆறு கேள்விகளுக்கு மேலதிகமாக இரண்டு கேள்விகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை, படிவங்களில் பெயர் குறிக்கப்படுபவர்களின் மொழிகளுடன் சம்பந்தப்பட்டவை.

கனடாவில் குடியேறியவர்களுக்கும், அவர்களது குடும்பத்தவர்களுக்கும் இந்தக் கேள்விகளே முக்கியமானவை. முக்கியமாக, தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இங்கு வந்து குடியேறியவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு இங்கு பிறந்த பிள்ளைகளாக இருந்தாலும் சரி, அவர்கள் தமிழர்கள் என்னும் விபரம் தவறாது பதியப்பட வேண்டும்.

இல்லையேல், இப்போதிருப்பது போன்று, கனடியத் தமிழர்களின் மொத்த எண்ணிக்கையை குத்து மதிப்பீடாக சொல்ல நேரும். கடந்த காலங்களில் கனடியத் தமிழர்கள் குடித்தொகைக் கணக்கெடுப்பு விடயத்தில் காட்டிய அசிரத்தையும், தெரிந்தோ தெரியாமலோ விட்ட தவறுகளுமே அரசாங்க எண்ணிக்கையில் எம்மவர் தொகையை மிகக்குறைவாகப் பதிய வைத்துள்ளது.

முக்கியமாகக் கவனிக்க வேண்டிய இரண்டு கேள்விகள் உண்டு.

1. "வீட்டில் மிகவும் அடிக்கடி பேசும் மொழி என்ன என்ற கேள்வியின் கீழ் ஆங்கிலம், அல்லது பிரெஞ்ச் என்பதன் கீழே, வேறு - குறிப்பிடவும்" என்று உள்ளது.
2. "வீட்டில் முதலில் இன்றும் புரிந்து கொண்டு பேசும் மொழி எது: என்ற கேள்விக்கும் ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் என்பதற்குக் கீழே வேறு - குறிப்பிடவும்" என்று உள்ளது.

இந்த இரண்டு கேள்விகளுக்கும், வேறு என்பதன் கீழ் **தமிழ்** என்று தமிழர்கள் ஒவ்வொருவரும் தவறாது எழுத வேண்டும். அவ்வாறு எழுதினால் மட்டுமே, கனடாவிலுள்ள தமிழர்களின் சரியான எண்ணிக்கை பதிவாகும்.




## தமிழின அழிப்பு நினைவு மாதமும் போர்க்குற்றவியல் நாள் நிகழ்வுகளும்

மே மாதம் 1ம் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை
கையெழுத்துப் பெற்றுக்கொள்ளல், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசைப் போர்க்குற்றவாளியென நிரூபிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.
கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)

மே மாதம் 1ம் திகதி தொடக்கம் 3ம் திகதிவரை - 72 மணிநேர முகநூல் பரப்புரை (Facebook-Social media) - தமிழ் இளையோர் அமைப்பு (TYO)

மே 6ம் திகதிகவனயீர்ப்பு - அமெரிக்கத் துணைத்தூதரகம்
அனைத்து கனடியத்தமிழ் அமைப்புக்களும் ஒருங்கிணைந்து

மே 9ம் திகதி - துண்டுப் பிரசுரம் கொடுத்தல் விண்ணப்பம் கையளித்தல்
தமிழ் இளையோர் அமைப்பு (TYO)

மே 11ம் திகதி - சர்வமதப் பிரார்த்தனை
கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)

மே 13ம் திகதி - துண்டுப் பிரசுரம் கொடுத்தல் - விண்ணப்பம் கையளித்தல்
தமிழ் இளையோர் அமைப்பு (TYO)

மே 14ம் திகதி - இரத்த தானம் - கனடா கந்தசாமி கோயில் மண்டபம்
கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)

மே 15ம் திகதி - மிதியுந்துப் பரப்புரை
கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)

மே 18ம் திகதி - போர்க்குற்றவியல் நாள் நினைவு நிகழ்வு (ரொறன்ரோ - மொன்றியல்)
கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)

மே 20ம் திகதி - மே 18க்கும் அப்பால்.........
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் - ஜனநாயகவாதிகள் (TGTE-Democrats)

மே 22ம் திகதி - மரம் நாட்டல்
தமிழ் இளையோர் அமைப்பு (TYO)

மே 28ம் திகதி - இரத்த தானம்
தமிழ் இளையோர் அமைப்பு (TYO)

மே 11ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை
கனடியத் தமிழர் தேசிய அவையின் தலைமைப் பணிமனை வணக்க நிகழ்விற்காக காலை 8.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணிவரை திறந்திருக்கும்

**கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)**
பணிமனை: 5310 Finch Ave., Unit 10, Scarborough, ON
தொலைபேசி: 1 866 263 8622 - 416 646 7624
மின்னஞ்சல்: info@ncctcanada.ca • இணையத்தளம்: www.ncctcanada.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# உலகக்கிண்ணம் 2011 - ஆசிய நாடுகளின் பொம்மலாட்டமா?

10வது உலகக் கிண்ணப் போட்டிகளில் பல சாதனைகள் வேதனைகள் ஏற்பட்டிருந்தாலும், கிரிக்கெட் ரசிகர்களின் புருவங்களை இரண்டு விதத்தில் ஆச்சரியப்பட வைத்தது இந்த 10வது உலகக் கிண்ணப் போட்டிகள். அரை இறுதிப் போட்டிகளும், இறுதிப் போட்டிகளும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு பல கேள்விகளை எழுப்பியுள்ளது என்றால் மிகையாகாது!

அரசியலையும், விளையாட்டையும் சம்பந்தப்படுத்த முடியாது என்று பலர் விவாதித்தாலும், ஆசிய நாடுகளில் நடக்கும் போட்டிகளில் அரசியல் நிறையவே ஊடுருவுகின்றது என்பது தத்ரூபமான உண்மை. இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகள் கடந்தகால சரித்திரத்தை மாற்றி அமைத்தாலும் “அதாவது போட்டி நடத்தும் எந்த நாடும் உலகக் கிண்ணத்தை வெல்லவில்லை” பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடந்த அரை இறுதியாட்டம் ஜென்டில்மேன்களின் கிரிக்கெட் ஆட்டமா இல்லை அரசியலும் பணமும் ஆட்டுவிக்கும் பொம்மலாட்டமா என்பதை அப்பாவி கிரிக்கெட் ரசிகர்களின் விழிகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வீரர்கள், அணித் தலைவர் உட்பட ரசிகர்களுக்கு பொம்மலாட்டம் காட்டினார்கள் என்பதை கிரிக்கெட் விளையாடி அறிவுள்ள எந்த வீரர்களும் புரிந்து கொள்ள முடியும். மேலும் சொல்லப் போனால் இறுதியாட்டத்தில் இலங்கை அணியும், இந்தியாவும் மோதிக் கொண்ட விதங்களை பார்க்கும் போது இலங்கை அணித் தலைவர் சங்ககார இறுதி 5 ஓவர்களில் பந்து வீச்சாளர்களை மாற்றிய விதம், முரளிதரனுக்கும் மலிங்காவிற்கும் குறைந்த அளவு ஓட்டங்களை வழங்கிய இவர்களுக்கு பந்து வீச்சு மறுக்கப்பட்டு அதிகளவு ஓட்டங்களை வாரி வழங்கிய பந்து வீச்சாளர்களுக்கு ஓவர்களை வழங்கிய விதமும், உலகில் தலைசிறந்த விக்கெட் காப்பாளரான அணித்தலைவர் சங்ககார பந்தை கோட்டை விட்ட விதமும், களதடுப்பை தேவையான நேரத்தில் மாற்றங்கள் செய்யாது விட்டவிதமும் அரசியல் காரணங்களுக்காக இலங்கை அணி பாரத மாதாவிற்கு நன்றிக் கடன் செய்ததா என்பதே தற்போது அப்பாவி ரசிகர் முன்னிலையில் உள்ள கேள்வி??

63 ஆயிரம் தடவைக்குமேல் சுழன்ற முரளிதரனின் கை தற்போது சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்ந்துள்ளது!

கிரிக்கெட் விளையாட்டில் சுழல்பந்து ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் இலங்கை அணிக்கு எண்ண முடியாத பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த முரளிதரன் தற்போது தனது சூறாவளி சுழலுக்கு ஓய்வு கொடுத்துள்ளார். ஒரு தமிழ்மகன் உலகத்தில் ஏற்படுத்திய சாதனைகளை முறியடிக்க இனி ஒருவர் பிறந்து தான் வர வேண்டும் என்பது நாம் எல்லோரும் பெருமைப்பட கூடிய விடயமாகும். பல சோதனைகளுக்கு மத்தியிலும் தனது விடாமுயற்சியினால் சிறப்பாக செயற்பட்ட முரளி பல அரிய சாதனைகளை நிலைநாட்டி விட்டுத்தான் ஓய்வு பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்ற 10 உலகக் கிண்ணப் போட்டிகளில் அவுஸ்திரேலியா 4 தடவைகளும், இந்தியா 2 தடவைகளும், மேற்கிந்திய தீவுகள் 2 தடவைகளும், இலங்கை, பாகிஸ்தான் ஒவ்வொரு தடவையும் வென்றுள்ளன.

இம்முறை நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் ரசிகர்களை ஒரு கணம் திரும்பிப் பார்க்க வைத்த அணி என்றால் அயர்லாந்து அணி என்பது உண்மை.

10வது உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் வரிசையில் தில்ஷான் (இலங்கை) 9 ஆட்டங்களில் 500 ஓட்டங்களும், சச்சின் (இந்தியா) 9 ஆட்டங்களில் 482 ஓட்டங்களும், சங்ககார (இலங்கை) 465 ஓட்டங்களும் எடுத்து முதல் மூன்று இடத்தைப் பிடித்துள்ளனர்.

பந்துவீச்சில் அதிக விக்கெட்டுகள் எடுத்தவர் வரிசையில் அப்பிரிதி (பாகிஸ்தான்) 8 ஆட்டங்களில் 21 விக்கெட்டுகளையும், ஜாகீர்கான் (இந்தியா) 21 விக்கெட்டுக்களை 9 ஆட்டங்களிலும் எடுத்துள்ளனர். டிம்சேய்தி (நியூசிலாந்து)18 விக்கெட்டுக்களை எடுத்து மூன்றாவது இடத்தில் உள்ளார்.

ஓர் ஆட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்கள்:- சேவாக்(இந்தியா) 175, ஸ்டிராஸ் (இங்கிலாந்து)158, தில்ஷான் (இலங்கை) 144 ஓட்டங்கள். அதிக சிக்ஸர்கள்:- ராங்டெல்லர் (நியூசிலாந்து) 14, பொல்லார்கு (மே.இ.அ) 11, ஏ்பிறையன் (அயர்லாந்து) 9 வானுயர அடித்துள்ளார்கள். ●


R & S AUTO SALES
Top Quality Used Car Dealer
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8
416-412-3838
416-836-5825




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"THINKING OF BUYING OR SELLING"

**Residential and Commercial Buying / Selling & Leasing**

DIAMOND CLUB AWARD - 2010

GOLD CLUB AWARD - 2009

*Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers*



**Raja V.S. Rajagopal**

Sales Representative

**Dir : 416.727.8647**

Email: sinnahrajagopal@gmail.com

Make the Right Move, at the Right Time, with the Right Professional

**HomeLife /Future Realty Inc.,**

Brokerage*

205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8

**Bus.: 416.264.0101**

Fax : 905.201.9229

*Independently Owned and Operated, REALTOR



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

52

வெள்ளிப்பணத் தொடர் இம்முறையும் வருமானவரி பற்றிய கேள்வி பதிலாக அமைகிறது.

கேள்வி: நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவன். கடந்த வருடம் அதாவது 2010ஆம் ஆண்டு பகுதி நேரமாகக்கூட வேலை செய்யவில்லை. இப்படியான நிலையில் நான் ஏன் வருமான வரிப்பத்திரம் பூர்த்தி செய்தல் அவசியம் என கூறமுடியுமா?

பதில்: நீங்கள் ஏன் வருமான வரிப்பத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்கு மூன்று முக்கிய காரணங்களைக் கூறலாம்.
முதலாவதாக மத்திய மாகாண அரசுகளின் வரிச்சலுகையான HST TAX CREDIT இனைப் பெறுவதற்கு இது அவசியமாகிறது. 2010ஆம் ஆண்டு வருமான வரிப் பத்திரத்தினை நீங்கள் செய்யும் போது உங்கள் வருமானம் பற்றிய தகவல் தெரியப்படுத்தப் படுகின்றது. வருமானம் இல்லை என்பதற்காக வருமான வரிப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யக்கூடாது என்பது அர்த்தமல்ல.

HST Tax Credit என அழைக்கப்படும் இந்த கொடுப்பனவு 2010ஆம் ஆண்டு வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டுதான் 2010ஆம் ஆண்டு யூலை அக்டோபர் மற்றும் 2012ஆம் ஆண்டு தை மற்றும் சித்திரை மாதங்களுக்கான கொடுப்பனவு கணிப்பீடு செய்யப்படுகிறது. இதுபோன்றுதான் ஒன்ராரியோ மாகாணத்தால் வழங்கப்படும் Sales Tax Credit மற்றும் Property Tax Credit போன்ற சலுகை பெறமுடியாமல் போகலாம்.

இரண்டாவது காரணமாக நீங்கள் OSAP என அழைக்கப்படும் கடன் பெற்று படிப்பவராக இருந்தால் இந்த கடனை பெறுவதற்கு நிச்சயமாக நீங்கள் வருமான வரிப் பத்திரம் பூர்த்தி செய்துதான் ஆகவேண்டும். இந்த கடனை பெற்று படிக்காதவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்கமுடியும்.
மூன்றாவது முக்கிய காரணமாக கூறுவது நீங்கள் உங்கள் உயர் கல்விக்காக செலுத்திய கல்விக்கட்டணம் அதன் தொடர்பான Education Amount என அழைக்கப்படும் வரிச்சலுகைகளை பெறுவதற்கு இது அவசியமாகிறது. இப்படியான வரிச்சலுகைகள் தற்பொழுது உங்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் உங்கள் பெற்றோர்கள் கூடிய வருமானம் உழைப்பவர்களாக இருக்கின்ற போது அவர்கள் கூடிய வருமானவரிக் கழிவினை பெற உதவி செய்யும்.

இது பெற்றோருக்கு மாத்திரமல்லாமல் ஒரு மாணவன் அல்லது மாணவி திருமணம் செய்தவராக இருந்தால் கணவன் மனைவி இவர்களில் ஒருவர் கூடிய வரி செலுத்த வேண்டிய நிலையில் அதன் தாக்கத்தை குறைக்க உதவி செய்யும்.

கேள்வி: நான் ஒட்டாவா பல்கலைக் கழகத்தில் 2010ஆம் ஆண்டு முழு நேர மாணவனாக இருந்தேன். நான் கல்வி கட்டணமாக 5,000 டாலர் செலுத்தியிருந்தேன். 8 மாதங்கள் முழு நேரமாக படித்தேன், கோடை கால விடுமுறையை தவிர. இதுமாத்திரமல்ல, மாதம் 400 டாலர்கள் என 8 மாதங்கள் வாடகையாக செலுத்தினேன். எனக்கு இதனைத் தவிர வேறு எந்த வருமானமும் கிடையாது. நான் வருமான வரிப்பத்திரத்தினை பூர்த்தி செய்யும் போது எப்படியான நன்மை கிடைக்கும்?

பதில்: உங்கள் வதிவிடம் ஒன்ராறியோவாக இருப்பதனால் மாகாண அரசின் வரிச்சலுகையாக 346 டாலர்கள் வாடகை செலுத்தியதால் Property Tax Credit என அழைக்கப்படும் சொத்துவரி மீளளிப்பாக கிடைக்கும். இதுமாத்திரமல்ல மூன்று மாதத்துக்கு ஒருமுறை கொடுக்கப்படும் HST Credit 63 டாலர்கள் ஜுலை 1, 2011 இல் இருந்து கிடைக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IN REMEMBRANCE...**

At this point of time, I would like to concentrate on the newly published report by the UN Panel of Experts on Sri Lanka. The UN Panel of Experts on Accountability in Sri Lanka, was set up to advise the UN Secretary General on accountability issues relating to alleged violations of international human rights and humanitarian law during the final stages of the conflict in Sri Lanka. International bodies which once failed to provide answers to our cries have now admitted that during the final stages of the war, the United Nations political organs and bodies failed to take actions that might have protected civilians and has also knowingly failed to release the casualty figures of the civilians. As we pushed for external powers to identify the crimes which were committed against humanity in Sri Lanka the UN panel has reported the following: Firstly, the government has said that it pursued a "humanitarian rescue operation with a policy of zero civilian causalities", however in contrast the panel has found credible allegations of serious violations of international human/human rights law. Secondly, the panel has said that the "government has shelled on a large scale in three consecutive No Fire Zones, after encouraging the civilians to enter these zones saying that they would cease all usage of heavy weapons". Thirdly, the panel has also mentioned that the "Sri Lankan Government had systematically shelled hospitals repeatedly by heavy artillery and mortars". The government systematically deprived people affected by the war of humanitarian aid and basic necessities. In conclusion, according to the UN panel report on Sri Lanka, "a civilian causality of 40,000-75, 000 was possible and most casualties and suffering of civilians was caused by the shelling of the Sri Lankan Government". This clearly depicts the atrocities committed against the Tamils in Sri Lanka.

We, as Tamils have come a long way in our struggle. We shall not lose hope and confidence now. As a community, what are the steps needed to be taken to progress further in our struggle for justice and independence? We need to set our goals for the present and near future. As of now, we have the need to achieve a few goals. Firstly, we need to continue to exert pressure against international bodies, with more power, strength, and evidences, that an international, independent, and impartial inquiry into Sri Lanka' s war crimes must be held in order for peace and justice to sprout in the island of Sri Lanka. A war crimes investigation is not a choice, it is the duty of the United Nations to hold Sri Lankan officials accountable for their criminal actions and execute the usage of international law with honesty and dignity. Secondly, we as the Tamil community need to urge the international community to hold Sri Lankan authorities individually criminally responsible before the International Criminal Court for the extermination and ethnic cleansing of Tamils performed in a systematic manner, as supported by many international organizations and by footages and videos of media corporations (Channel 4). Thirdly, we need to urge the Sri Lankan government to evacuate military occupation from civilian populated areas. The war has come to an end; therefore there is absolutely no need for the Sri Lankan soldiers to concentrate around schools, hospitals, churches, temples, and homes. Fourthly, we need to pressure the government to allow Tamils to resettle into their homes with the absence of military and Sinhalese colonization of the lands belonging to the Tamil population. However, we shall not mark the end of our actions as of yet. Let us look into the future now.

The conduction of a successful international inquiry in Sri Lanka will not satisfy the Tamils to their fullest. We need to work to end double standards and towards the creation of justice and peace for the Tamils, which can be achieved by demanding the international community to support a peaceful solution that addresses the political aspirations of the Tamils in Sri Lanka. It is important to equally concentrate on the development and establishment of a concrete Tamil identity and homeland. The importance of organizing as a Diaspora, and looking into the future to create our homeland and redeveloping the lives of our people is just as important as urging for a war crimes investigation. We, as the Tamil community, are very grateful the United Nations Panel of Expert for conducting an investigation about war crimes and accountability in Sri Lanka, however, the report has overstepped by rejecting the existence of a homeland for the Eezham Tamils (Sections 417-420) .We need to unite and remember that a separate homeland has always existed and that our history cannot be denied by anyone. Referring to a statement made by Professor Francis Boyle, "creating Thamil Eelam is the only remedy for the Tamils", this makes it clear that we are the only ones with total rights and authority over our fate, governance and way of living. As said by Prof. Boyle, the recommendations of reconciliation suggested by the Panel has been rejected by the GOSL, therefore we cannot wait till for the government to fulfill its dishonest duties, we are the only ones to pave a path for the establishment of our future.

It is our time to play the game of power. We need to stand in solidarity to fight for justice and give birth to a permanent solution for our people. We need to be the voices for those whose voices have been silenced. A genuine process of an international investigation of war crimes must take place for peace and reconciliation to be fostered and sustained in Sri Lanka. On this month, a month signifying war crimes that occurred in Sri Lanka, let us promise our selves that we will unite and work tirelessly with determination and perseverance till all our goals for the present and future have been attained! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A1 கொழும்பு**

**டிஜிட்டல் போட்டோ ஸ்ரூடியோ & வீடியோ**

முதல் தரமான அனைத்து போட்டோ, வீடியோ படப்பிடிப்புகள் எல்லா வகையான போட்டோ வீடியோ வேலைகள்



**From:**

அல்பத்துடன் போட்டோ PACKAGES

25 - 5X7 பிறந்த நாள் $125.00

75 - 5x7 அரங்கேற்றம் $375.00

50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $250.00

25 - 5x7 போட்டோக்கள் வீட்டிற்கு வந்து எடுப்பதற்கு $125.00

25 - 5x7 முதன் நன்மை $125.00

10 - 5X7 பட்டமளிப்பு விழா படங்கள் $50.00

75-5x7 திருமணவிழா $375.00

2 பாஸ்போட் 5 நிமிடத்தில் $10.00

2 சிற்றிசன் 5 நிமிடத்தில் $10.00

2 லான்டட் காட் 5 நிமிடத்தில் $10.00

2 அனைத்துவிதமான ஐ. டி. 5 நிமிடத்தில் $10.00

3 - 5X7 ஸ்ரூடியோ போட்டோ $30.00

**ST-FRANCIS**

L.L-3, 2296 EGLINTON AVE. E

@ BIRCHMOUNT ROAD

**416-752-4444**


**Tel: 416-755-2333**

**416-613-2818**

Web: www.tamilsyellowpages.com

E-Mail:www.typ@gmail.com

# நிலையான நினைவுகளுடன் இருபத்தியிரண்டு ஆண்டுகள்!



## செல்வன் எஸ். தி. அகிலன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்; விளையாட்டு வீரன்

**தனயனாக: 05. 05. 1970 தந்தைக்காக: 10. 05. 1989**

**ஈழத்தமிழரைக் காக்கவென வந்த இந்திய அராஜகப் படையாலும், அதற்குத் துணைபோன துரோகக் கும்பலாலும், தாய்மண்ணில் பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் போராடிய தந்தைக்காகப் பலியெடுக்கப்பட்ட பாலஅபிமன்யு.**

*இருகண்ணுக் கொருமணியாய்*
*எம்வாழ்வில் திகழ்ந்தவனே!*
*அரும்மைந்தா எங்களுயிர்*
*அகிலா! அரூபியென*
*இருபத்தீ ராண்டுகள்நீ*
*எம்முடனே இருப்பதுபோல்*
*ஒருநம்பிக் கையோடே*
*உயிர்வாழ்கின் றோம்ஐயா!*

**அம்மா, அப்பா**
**குடும்ப உறவினர்கள், நண்பர்கள்**
**416.920.9250**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

# JRB Universal Inc.

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

## இனிமையும் இளமையும்..

வரிகளுக்குள் கட்டுரையில் உள்ள ஆழமான கருத்துருவங்களையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். கடந்த காலங்களில் வெளிவந்த

மலர்களில் இடம்பெறாத புது முயற்சி இதுவாகும். மலருக்கு மிகவும் பொருத்தமாக முதலில் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களது கட்டுரை இடம்பெற்றுள்ளது. 'கனடாவில் தமிழர்: நேற்று இன்று நாளை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இக்கட்டுரை முழுவதும் அழகு தமிழாகும். பண்டிதர் ஒருவருக்கு எல்லாத் துறைகளிலும் ஆற்றல் நிரம்பி வழிகின்றது! வழமையான கல்விக் கட்டுரைகளே எழுதி வரும் கனகேஸ்வரி நடராஜா 'கால் நூற்றாண்டு புலத்தில் தமிழ் மாணவர் கண்டுள்ள மாற்றங்கள்' என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இவர் எமது மாணவர்களின் அபரிமிதமான அறிவு வளர்ச்சியை ஆழமாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டத்தரணியும் எழுத்தாளருமான தெய்வா மோகன் எழுதிய 'குடும்ப விழுமியங்கள்' கட்டுரையில் குடும்ப அனுபவம் உள்ள பல கருத்துக்கள் உள்ளன. குடும்ப அமைவுக்குரிய ஆலோசனைகள் இவைகள்.

நீண்டகால எழுத்தாளர் வீணைமைந்தன் 'தமிழர் தகவல் தமிழரின் பொக்கிஷம்' என்ற தலைப்பில் எதிர்கால ஆராய்ச்சிக்கு இச்சஞ்சிகை உதவப் போவது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மிகவும் வியப்புக்குரிய எழுத்துக்களை தனதாக்கிக் கொண்ட கலைவாணி ராஜகுமாரன் தாயகத்தின் அவல நிலையை ஈட்டியால் குத்தியது போன்ற வார்த்தைகளில் வடித்துள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற நீதன் சண் ஆங்கிலத்தில் எழுதிய 'Tamil Canada Vision 2020' என்ற கட்டுரையில் எதிர்வரும் 10 வருடங்களில் எமக்கு என்ன தேவைப்படுகிறது என்பதனையும் 15 வகையான இலக்குகள் தேவைப்படுவதனையும் விளக்கியுள்ளார். எழுத்தாளர் காந்தி செல்வராஜா 'பொருளியல் அறிவின் முக்கியத்துவம்' பற்றி எழுதும் போது கல்வியில் பொருளாதாரத்தின் இன்றியமையாமை பற்றி மிகவும் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்டகாலமாக எழுதி வரும் சபா அருள்சுப்பிரமணியம் 'சிறுவர் இலக்கியங்களின் அத்தியாவசியம்' பற்றி எழுதுவதற்கு பொருத்தமானவர். சிறுவர்கள் பற்றி அவர் கொண்டுள்ள ஆழமான அறிவு இக்கட்டுரையில் புலனாகிறது. முனைவர் இ. பாலசுந்தரம் அவர்கள் தனது கட்டுரையில் கனடிய அரசுப் பாடசாலைகளில் தமிழ் மாணவர் தமிழ் கற்கும் உரிமைகளை இழந்து வருவதன் காரணத்தை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

மொழியில் பாண்டித்தியம் பெற்ற பொன்னையா விவேகானந்தன் எழுதிய கட்டுரை 'தமிழின் இருப்பே தமிழரின் இருப்பு' பொருத்தமானதொரு கட்டுரையாகும். ஒன்பது கோடி தமிழரை இணைக்கும் தமிழ்மொழியை வல்லமை கொண்டதென்கிறார் பேராசிரியர் ஜோசேப் ஏ.சந்திரகாந்தன் 'EelamTamils in Canada. Twenty year in Retrospect and Prospect' என்ற கட்டுரையில் தமிழர்களின் சகல துறைகளின் அடையாளத்துவம் பற்றி ஆழமாக விளக்குகின்றார். இடையே ஒரு கவிதை இடம்பெற்றுள்ளது. தீ.வே. இராஜலிங்கம் 'ஒரு கனபரிமாணம்!' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதியுள்ளார். தேசிய தலைவரை கார்த்திகை மலராக்கி கனதி காண்கிறார்.

குறிஞ்சிப் பூக்கள் போல் மலரும் எழுத்தாளர் தனலஷ்மி சபாநடேசன் 'ஆதரவும் ஆறுதலும்' என்ற தலைப்பில் பல்வேறு நோயுள்ளவர்களுக்கு எவ்வாறு ஆதரவும் ஆறுதலும் காட்ட வேண்டும் என்ற பரிவுணர்ச்சி அவருக்குள்ளது. தமிழ் உலகம் அறிந்த எழுத்தாளர் அ.முத்துலிங்கம் 'விருந்தோம்பல்' தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். சோமா என்ற பெண்மணி விருந்துபசாரம் செய்ததை எவ்வளவு அழகாக படைத்துள்ளார்! சம்பவங்களை கதையாகவும் கட்டுரையாகவும் மாற்றும் திறமை அவருக்குரிய தனித்துவம்.

தனித்துவமான எழுத்தாளர் எஸ்.ஜெகதீசன் கிளிச்சாத்திரத்திலிருந்து கர்மவினைப் பரிகாரம் பற்றியெல்லாம் ஒரு அலசல் செய்கிறார். உலகில் உள்ள பல சாத்திரங்களையும் அறிமுகம் செய்துள்ளார். விதியா மதியா எதுவேண்டும் என்பது அவரவர் எண்ணமே! எழுத்தாளர் இரா சம்பந்தன் 'பழந்தமிழரின் வானியல் கொள்கைகள் பற்றிய தகவல்களை' தந்துள்ளார். நீண்டகால எழுத்தாளர் Fred. V.Balasingam 'Suportive home care for seniors' என்ற தலைப்பில் முதியோர்களுக்கான பல்வேறு ஆதரவு நிலைமைகள் பற்றி தொகுத்துள்ளார்.

ஊடகத்துறையில் பயிற்சி பெற்ற பி.விக்னேஸ்வரன் தற்கால தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள் பற்றி எழுதும்போது எதிர்காலத்தில் தொய்வு ஏற்படாது மேம்பாடு காண வேண்டும் என்கிறார். பிரபல எழுத்தாளர் க.நவம் 'நூலளவே ஆகுமோ நுண்ணறிவு'? என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பில உண்மைச் சம்பவங்களை காட்டியுள்ளார். நூல் சேகரிப்பு வேறு நுண்ணறிவு வேறு என்பதனை இங்குள்ளோர்களைக் காட்டி எழுதியுள்ளது மிகவும் சுவைபடுகிறது. கலைஞர் வயிரமுத்து திவ்வியராஜனின் 'படைப்பும் சுவைப்பும்' மிக பயனுள்ள கட்டுரை.

(ஜுன் இதழில் நிறைவடையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**

Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2


## 'கள்ளவோட்' ராஜபக்ஷ...

நினைத்திருக்கிறார் ராஜபக்ஷ. இதைத் தொடர்ந்து, களத்தில் இறங்கிய ராஜபக்ஷவின் கைத்தடிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அவருக்கு ஆதரவாகக் கள்ள ஓட்டுப் போட்டனர். இலங்கையில் ராணுவத்தின் தொழில்நுட்பத் துறையும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களும் இந்தப் பின்னணியில் இருந்திருக்கின்றன. ராஜபக்ஷவுக்கு ஆதரவாக விழுந்த வாக்குகள் அவ்வளவும் கொத்துக் கொத்தாக விழுந்து இருப்பதைக் கண்டுபிடித்த 'ரைம்' தொழில்நுட்பக் குழு, 'இது திட்டமிட்ட சதி' என்று ஆதாரப்பூர்வமாக தேர்வுக் குழுவிடம் தெரிவித்தது.

இதன் தொடர்ச்சியாகவே, ராஜபக்ஷவின் பெயர் நீக்கப்பட்டது. இந்தப் பின்கதையை எல்லாம் எதிர்பார்க்காமல், பட்டியல் வெளியாவதற்கு முன்னதாகவே ஆர்வக்கோளாறில் செய்தியை இலங்கை அரசு தரப்பே சொல்லிவிட்டதால், வெளியே தலைகாட்ட முடியாத அவமானத்தில் சிக்கி இருக்கிறார் ராஜபக்ஷ. போர் வெற்றிக்குப் பின் அவரது அசுர ஆட்டத்தில் ஆட்டம் கண்டு, அடங்கிப்போய் இருந்த எதிர்க் கட்சிகளும், இதையே சாக்காக வைத்து, "சர்வதேச அளவில் இலங்கைக்குப் பெரும் தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டார் ராஜபக்ஷ" என்று பிரசாரத்தில் இறங்கிவிட்டன. இதனால், கையைப் பிசைந்துகொண்டு இருக்கிறார் ராஜபக்ஷ! ●


SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

Laminate, Mirror, Panel, Closet Droos
Carpet, Hardwood, Tiles, Granite Flooring
Windows + Doors, Kitchen + Bath
Renovation or New!





3/4 INCH HARDWOOD SUPPLIED AND INSTALLED $4.99

Sabesan's Choice

**416 605 1990**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca


# Time: Man of the Year

## 'கள்ள வோட்' மகிந்த ராஜபக்சவுக்கு அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை அளித்த அதிரடி அதிர்ச்சி வைத்தியம்!



'உலகின் செல்வாக்கு மிக்கவர்கள் பட்டியலில் ராஜபக்ஷ - 'ரைம்' சஞ்சிகை வாக்கெடுப்பில் முந்துகிறார்!' - இலங்கை ஊடகங்களில் இப்படி ஒரு செய்தியைப் பார்த்தவர்களுக்குப் பயங்கர அதிர்ச்சி!

அமெரிக்காவின் வார இதழான 'ரைம்', உலகின் முன்னணிச் சஞ்சிகை. இதன் வாசகர்கள், உள்நாட்டில் இரண்டு கோடி பேர். வெளிநாடுகளில் 2.5 கோடி பேர். ஆகையால், 'ரைம்' பிரசுரிக்கும் விஷயங்கள், சர்வதேச கவனத்தைப் பெறும். ஆண்டுதோறும் 'மான் ஆஃப் தி இயர்' ஆகத் தேர்ந்து எடுக்கப்பட்டு, அட்டையில் இடம் பெறுபவர்கள், கிட்டத்தட்ட நோபல் பரிசு பெற்றதற்கு இணையான புகழைப் பெறுகிறார்கள்!

பிரபலங்களைத் தேர்ந்தெடுப்பதில், இணைய வாக்கெடுப்பின் மூலம் வாசகர்களும் பங்கேற்கலாம் என்பதால், பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே இந்தப் பட்டியல் வெளியாகும். இந்தப் பட்டியலில், 'ராஜபக்ஷ' இடம் பெற்று இருக்கிறார்' என்று வெளியிட்டன இலங்கை ஊடகங்கள்!

'ஈழப் பிரச்னையைப் பொறுத்த அளவில், 'ரைம்' எப்போதுமே இரு தரப்புத் தவறுகளையும் விமர்சித்து இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இலங்கை அரசின் தவறுகளைத் தொடர்ந்து விமர்சிக்கும் சஞ்சிகையாகவே அது இருந்து இருக்கிறது.

இத்தகைய சூழலில், இது எப்படி சாத்தியம்?' என்று குழம்பினார்கள் வாசகர்கள். ஆனால், 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்' அதிகாரப்பூர்வ இணையதளத்தில், ஏப்ரல் 17-ம் தேதி ஒரு செய்தி வெளிவந்தது. அதில், 'ரைம்' பட்டியலில் ராஜபக்ஷ இடம் பெற்று இருப்பதை உறுதி செய்ததுடன், இரண்டு லட்சத்து 3,117 வாக்குகளுடன் 4-ம் இடத்தில் அவர் இருப்பதாகவும் தெரிவித்தது. 'பயங்கரவாதத்துக்கு எதிராக ராஜபக்ஷ எடுத்த நடவடிக்கைகளுக்கும், ஜனநாயகம் செழிக்க எடுத்த நடவடிக்கைகளுக்கும் கிடைத்து இருக்கும் சர்வதேச அங்கீகாரம் இது!' என்று குறிப்பிட்டது. அதோடு, அமெரிக்க அதிபர் ஒபாமா 40-வது இடத்திலும், காங்கிரஸ் தலைவர் சோனியா 100-வது இடத்திலும் பின்தங்கி இருப்பதாகவும் சுட்டிக்காட்டி புளகாங்கிதம் அடைந்து இருந்தது. 'ரைம்' இதழின் இணைய தளமும் இந்தச் செய்தியை உறுதி செய்தது.

ஆனால், ஏப்ரல் 21-ம் தேதி இந்த வாக்கெடுப்பு முடிந்து, மறுநாள் 'செல்வாக்கு மிக்க 100 பேர்' அறிவிக்கப்பட்ட நிலையில், பட்டியலில் இருந்து அதிரடியாகத் தூக்கப்பட்டது ராஜபக்ஷ பெயர்! பட்டியலில் ராஜபக்ஷ இடம் பெற்று இருக்கும் தகவல் வெளியானதுமே, 'உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஒரு போர்க் குற்றவாளியை முன்னிலைப் படுத்துவதா?' என்று 'ரைம்' சஞ்சிகைக்குக் கண்டனங்கள் குவிந்தன. தவிர, உலகம் வெறுக்கும் ஒரு நபர் இவ்வளவு வாக்குகளைப் பெற வாய்ப்பு இல்லை என்றும் ஏராளமானோர் சந்தேகம் எழுப்பினார்கள்.

இதே சந்தேகம் 'ரைம்' ஆசிரியர் குழுவில் உள்ளவர்களுக்கும் எழ, தன்னுடைய தொழில்நுட்பக் குழுவிடம் ராஜபக்ஷ விவகாரத்தை ஒப்படைத்தது தேர்வுக் குழு. அந்தக் குழு மேற்கொண்ட ஆய்வில்தான், இலங்கை ராணுவத்தின் தொழில்நுட்பப் பிரிவைக் கையில் வைத்துக்கொண்டு ராஜபக்ஷ செய்த தில்லுமுல்லு அம்பலமாகியது!

இலங்கை ராணுவம் அரங்கேற்றிய போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. குழு தயாரித்துள்ள அறிக்கை வெளிவரும்போது 'ரைம்' தகவல் வந்தால் நல்லது என்று

(33ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRACE FOR A GREAT SMILE

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

பல் சிகிச்சை நிலையம்

**பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை**

## Dr. M. ILLANGO

B.D.S Dip.Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics

பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

## Dr. ALI ADIBFAR

D.D.S, M.D, F.R.C.D (C) , Oral Surgeon

## Dr. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio, Gum Specialist

பல் முரசு வைத்திய நிபுணர்

## Dr. JANAKI ILLANGO

B.D.S.

குடும்ப பல் வைத்தியர்

## Dr. TEHCHIN HSIEH

D.D.S

குடும்ப பல் வைத்தியர்




**Scarborough Office**

3852 Finch Ave. E, Units 204, 303

Scarborough ON

**416 • 292 • 7004**

*Moved to new location*

**Brampton/Mississauga**




7920 Hurontario Street, Unit 37

(Hurontario & Steels Ave.)

Brampton ON L6Y 0P7

**905 • 457 • 1700**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

416-266-3333

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org